Registered as a news paper.

பக்கங்கள்: பன்னிரண்டு

விலை: ரூபா 7.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மலர் : 02 திருவள்ளுவர் ஆண்டு: 2035 மாசி 17 ஆம் நாள், ஹிஜ்ரி 1426 முஹறம் 08 (29.02.2004) ஞாயிற்றுக்கிழமை இதழ் :151

EXPOAIR

your friend in the skies...

ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021 - 2223891, 2226297
077-2349999, 011-4512666, 011-2360290, 011-2360291
email:-jaffna@expoavi.com, reservations@expoavi.com

இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை

எக்ஸ்போ.ஏயார்

வான் வெளியில்
உங்கள் நண்பன்...

## சொத்து விபரங்களை வெளிப்படுத்த வேட்பாளர்களிடம் கோரிக்கை

(கொழும்பு)

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் அனைவரும் - வேட்பு மனுவைத் தாக்கல் செய்த தினத்தன்று உள்ள தமது சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் விபரத்தைச் சமர்ப்பிக்குமாறு கோரப்பட்டுள்ளது.

இது தொடர்பாக தேர்தல் ஆணையாளர் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது-

எதிர்வரும் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களில் - வெற்றி பெறாதவர்கள் வேட்பு மனுத்தாக்கல் (12 ஆம் பக்கம் பார்க்க)

## காணாமற்போன மீனவர் சடலமாக மீட்கப்பட்டார்!

(வடமராட்சி)

கடந்த திங்களன்று வடமராட்சிக் கடலில் இந்திய மீனவர்களால் தாக்கப்பட்டு கடலில் வீசப்பட்டு காணாமற்போன ரத்தினம் சிவநந்தன் (வயது-31) என்ற மீனவர் ஆறு தினங்களின் பின்னர் நேற்று வல்வெட்டித்துறை கடற்கரையில் சடலமாக மீட்கப்பட்டார்.

வல்வெட்டித்துறை கடற்தொழில் சங்கத்தினரால் வல்வெட்டிதுறை கடற்கரையில் கண்டெடுக்கப்பட்ட இந்தச் சடலம் இறந்தவரின் உறவினர்களால் அடையாளம் காணப்பட்டது. கடந்த திங்கட்கிழமை உள்ளூர் மீனவர்கள் வடமராட்சிக் கடற்பரப்பில் மீன்பிடித்துக் கொண்டிருந்தவேளை அத்துமீறி அவ்விடத்துக்கு நுழைந்த இந்திய மீனவர்கள் இறந்த நபரை வெட்டி வீசினர்.

மற்றைய இருவரை வீசிவிட்டுச் சென்றனர். இவர்கள் இருவரும் மினவர்களின் உதவியுடன் மீட்கப்பட்டு வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர். (12 ஆம் பக்கம் பார்க்க)

## கூட்டமைப்பு வேட்பாளர்களுக்கு இலக்கங்கள் அறிவிப்பு!

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வேட்பாளர்களுக்கான இலக்கங்கள் தேர்தல் ஆணையாளர் நாயகத்தால் அறிவிக்கப்பட்டுள்ளன.

இதன்படி சுரேஷ்பிரேமச்சந்திரன் -1, ஸ்ரீகாந்தா - 2, சிவாஜிலிங்கம் - 3, சிவநேசன்-4, கஜேந்திரகுமார் - 5, ரவிராஜ் - 6, பத்மினி சிதம்ப ரநாதன்- 7, சிவமகாராசா - 8, சி.வி. கே. சிவஞானம் - 9, கஜேந்திரன் - 10, சூ.சிறில் - 11, மாவை. சேனாதிராசா - 12, ஆகியோருக்கு வேட்பாளர் இலக்கங்கள் வழங்கப்பட்டுள்ளன. (111)

# இந்தியாவின் இறையாண்மையினை புலிகள் சீர்குலைக்க மாட்டார்கள்!

## அரசியற்துறைப் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வன் உறுதி

(புதுடெல்கி)

**இந்தியாவின் இறையாண்மையைக் குலைக்கும் முயற்சியில் புலிகள் இயக்கம் ஒருபோதும் ஈடுபடாது. அதேவேளை, சமாதானப் பேச்சுவார்த்தைகளில் இந்தியா பங்கேற்கவேண்டும். அமைதித்தீர்வை உருவாக்குவதில் பங்கேற்பதற்கு ஏதுவாக புலிகள் மீதான தடையை நீக்கவேண்டும். இது சமாதானப் பேச்சுகளுக்கு உதவியாக அமையும் என்று அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தெரிவித்தார்.**

இந்தியாவிலிருந்து வெளியாகும் 'ஹிந்துஸ்தான் ரைம்ஸ்' இதழுக்கு தமிழ்ச்செல்வன் அளித்த சிறப்புப் பேட்டியிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். இந்தப்பேட்டியில் அவர் மேலும் தெரிவித்ததாவது-

ஈழத் தமிழர்களின் விடுதலைப் போராட்டம் குறித்து இந்தியா அச்சப்படத் தேவையில்லை. இந்தியாவில் உள்ள தமிழ்நாட்டுத் தமிழர்களின் சிக்கல்களும், தமிழீழத் தமிழர்களின் சிக்கல்களும் வெவ்வேறானவை.

- இந்தியா பல்வேறு இனக்குழுக்கள், மொழி பேசும் மக்கள் கொண்ட நாடு. அதிகாரப் பகிர்வுகளின் மூலம் இத்தகைய பிரிவினைகளை இந்தியா ஆக்கபூர்வமாக அனுசரித்துச் செல்கிறது. (12 ஆம் பக்கம் பார்க்க)



போர்நிறுத்த கண்காணிப்புக்குழுத்தலைவர் மேஜர் ஜெனரல் புறாவ் ஹொவ்டே அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனுடன் பேச்சு நடத்துகிறார்.

## கூட்டமைப்பு வெற்றிக்கு உழைக்க பொது அமைப்புக்கள் தீர்மானம்!

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் நாடாளுமன்றப் பொதுத் தேர்தலில் தமிழ்த் தேசியத்துக்கு வலுவூட்டி தமி

## தேர்தல் நடைமுறைகள் தொடர்பாக தமிழ்ச்செல்வன்-ஹொவ்டே பேச்சு!

யுத்தநிறுத்த உடன்பாட்டை வெற்றிகர

நிறுத்த கண்காணிப்புக்குழு தலைவர் மேஜர்

## உழவு இயந்திரம் மோதி குடும்பப் பெண் மரணம்!

ஏழாலையில் நேற்றுச் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

## கூட்டமைப்பு வெற்றிக்கு உழைக்க பொது அமைப்புக்கள் தீர்மானம்!

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் நாடாளுமன்றப் பொதுத் தேர்தலில் தமிழ்த் தேசியத்துக்கு வலுவூட்டி தமிழீழ விடுதலைப்புலிகளின் கரங்களைப் பலப்படுத்தவும், தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் வெற்றிக்கு உழைக்கவும் யாழ்.மாவட்ட பொது அமைப்புக்கள் தீர்மானித்துள்ளன.

யாழ்.மாவட்டத்தில் உள்ள ஐம்பதுக்கும் அதிகமான பொது அமைப்புப் பிரதிநிதிகள் கூடி இந்த தீர்மானத்தை எடுத்துள்ளனர்.

நேற்று மாலை நல்லூர் நாவலர் கலாசார மண்டபத்தில் இடம்பெற்ற கூட்டத்திலேயே இந்த முடிவு எடுக்கப்பட்டது.

இந்தக் கூட்டத்தில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு வேட்பாளர்கள் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் யாழ்.மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி, கோட்டப் பொறுப்பாளர் ஈஸ்வரன், மகளிர் கோட்டப் பொறுப்பாளர் பூமகள் ஆகியோர் கலந்து கொண்டு உரையாற்றினர்.

அற்ப சலுகைக்காக மக்கள் விலைபோகாமல் இருப்பதை உறுதிசெய்ய கிராம ரீதியாக பொது அமைப்புக்களைத்திரட்டி உறுதியாகியுள்ள வெற்றிக்கு மேலும் வலுச்சேர்க்க அனைவரும் ஓரணியில் செயற்படுவது எனவும் இந்தக் கூட்டத்தில் பொதுஅமைப்புக்களால் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (111)

## தேர்தல் நடைமுறைகள் தொடர்பாக தமிழ்ச்செல்வன்-ஹெறாவ்டே பேச்சு!

யுத்தநிறுத்த உடன்பாட்டை வெற்றிகரமாக நடத்துவது, விசேடமாக ஏப்ரல் மாதம் நடைபெறவுள்ள தேர்தலின்போது எமது கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் வாக்களிப்பு தொடர்பான நடைமுறை ஒழுங்குகள் என்பன தொடர்பாக போர்நிறுத்தக் கண்காணிப்புகுழுத் தலைவருடன் பேச்சுவார்த்தை நடத்தினோம்.

இவ்வாறு நேற்று கிளிநொச்சியில் போர்நிறுத்த கண்காணிப்புக்குழு தலைவர் மேஜர் ஜெனரல் டொன்புரூவ் ஹெறாவ்டேயுடனான சந்திப்பின் பின்னர் செய்தியாளர்களிடம் அரசியற்துறைப்பொறுப்பாளர் சு.ப தமிழ்ச்செல்வன் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது-

வாக்களிப்பு நடைமுறைகள் தொடர்பாக சில பிரேரணைகளை (12 ஆம் பக்கம் பார்க்க)

## எப்போது பிரதமர் ரணில் புலிகளின் பேச்சாளரானார்?

### கேள்வியெழுப்புகிறார் விமல் வீரவன்ச

(கொழும்பு)

எதிர்வரும் நாடாளுமன்றப் பொதுத்தேர்தலின் பின் ஆட்சியமைக்கும் புதிய அரசாங்கம் விடுதலைப் புலிகளின் இடைக்காலத் திட்ட வரைபு யோசனைகளை நிராகரித்தால், அவர்கள் யுத்தத்தை ஆரம்பிப்பார்கள் என்று பிரதமர் ரணில் எந்த அடிப்படையில் கூறுவார்?

இவ்வாறு கலதாரி ஹோட்டலில் நேற்று நடந்த ஊடகவியலாளர்களுக்கான கூட்டம் ஒன்றில் விமல் வீரவன்ச கேள்வியெழுப்பினார்.

நேற்றுமுன்தினம் கண்டியில் நடந்த ஐக்கிய தேசியக் கட்சியின் ஆரம்பப் பிரசாரக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய பிரதமர் ரணில் . (12 ஆம் பக்கம் பார்க்க)

## உழவு இயந்திரம் மோதி குடும்பப் பெண் மரணம்!

### ஏழாலையில் நேற்றுச் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

ஏழாலைச் சந்தியில் உழவு இயந்திரம் மோதி குடும்பப் பெண் ஒருவர் பரிதாபகரமாக உயிரிழந்தார்.

இந்தச் சம்பவம் நேற்றுமாலை 4.30 மணியளவில் இடம்பெற்றது. பாலசுப்பிரமணியம் தவஞானவதி (வயது-57) என்ற பெண்ணே இந்த விபத்துச் சம்பவத்தில் உயிரிழந்தார்.

மரணமடைந்த பெண் தனது வீட்டில் இருந்து எதிர்வீட்டுக்கு செல்வதற்காக ஏழாலை சந்திப்பகுதியில் (12 ஆம் பக்கம் பார்க்க)

## பூந்தோட்டம் நலன்புரி முகாம் தீப்பிடித்து எரிந்து நாசம்!

வவுனியா பூந்தோட்டம் பகுதியின் ஆறாம் யூனிட்டில் அமைந்துள்ள இடம்பெயர்ந்தோர் தங்கியுள்ள 10 கொட்டகைகள் நேற்று பகல் ஒரு மணியளவில் தீப்பிடித்து எரிந்து சாம்பலாகின.

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது -

452 குடும்பங்கள் தங்கியுள்ள இந்த 10 கொட்டகைகளுமே நேற்று பகல் ஒரு மணிக்கு தீப்பிடித்து எரிந்தன. (12 ஆம் பக்கம் பார்க்க)




தமிழ்த் தேசிய கூட்டமைப்பின்
யாழ். மாவட்ட வேட்பாளர்
செல்வராஜா கஜேந்திரன்
முன்னாள் யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத் தலைவரும், சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை தலைவரும்.
(சி-2256)



X 10

யாழ் - மாணவர் சமூகம்

## புதிய நிர்வாகிகள் தெரிவுக்கூட்டம்

சாவகச்சேரி நகரசபைக்குட்பட்ட சனசமூக நிலையங்களின் சமாசத்தின் புதிய நிர்வாகிகளைத் தெரிவு செய்வதற்கான கூட்டம் - இன்று மாலை 3 மணிக்கு மீசாலை கிழக்கு சித்திர வேலாயுதம் திருப்புகழ் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்தக் கூட்டத்தில் சாவகச்சேரி நகரசபைக்குட்பட்ட சனசமூக நிலையங்களின் பிரதிநிதி ஒருவரைத் தவறாது கலந்துகொள்ளுமாறு சனசமூக நிலையங்களின் சமாசத் தலைவர் எஸ்.மோகனநாதலிங்கம் தெரிவித்தார். (25)

## தேசிய அடையாள அட்டை கண்டெடுப்பு

கரவெட்டியைச் சேர்ந்த கணபதி சிம்பரப்பிள்ளை என்பவரது தேசிய அடையாள அட்டை கண்டெடுக்கப்பட்டு, 'நமது ஈழநாடு' அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் 'நமது ஈழநாடு' அலுவலகத்துக்கு நேரில் வந்து தேசிய அடையாள அட்டையைப் பெற்றுக்கொள்ள முடியும். (116)

## பொதுக்கூட்டம்

நீர்வேலி கண்ணாடித் தொழிற்சாலை அங்கத்தவர்களுக்கான மாதாந்தப் பொதுக்கூட்டம் - இன்று காலை 11 மணிக்கு நீர்வேலி கந்தசாமி கோவில் சனசமூக நிலையத்தில் நடைபெறவுள்ளது.

## கலந்துரையாடல்

யாழ். பல்கலைக்கழக மருதனார்மட இராமநாதன் நுண்கலை வளாக மாணவர்களுக்கான கலைவார நிகழவுகளில் கலந்துகொள்ளல் தொடர்பான அவசர கூட்டம் - நாளை நண பகல் 12 மணிக்கு நடனத்துறை வளாக நடேசர் அரங்கில் நடைபெறவுள்ளது.

இந்தக் கூட்டத்தில் அனைத்து வருட மாணவர்களையும் தவறாது கலந்துகொள்ளுமாறு கவின்கலை மன்றத் தலைவர் கேட்டுள்ளார்.

## அவசர கலந்துரையாடல்

வடபகுதியில் படையினரால் கைதுசெய்யப்பட்டு, காணாமற்போனோர் பாதுகாவலர் சங்கம் நடத்தவிருக்கும் மறியற் போராட்டம் சம்பந்தமான கலந்துரையாடல் இன்று காலை 10 மணிக்கு அன்னையர் முன்னணியில் நடைபெறவுள்ளதால், தயவுசெய்து உறுப்பினர்கள் தவறாது கலந்துகொள்ளுமாறு அன்னையர் முன்னணி தலைவி செ.கனகாம்பிகை கேட்டுள்ளார்.

## ஆசிரியர்களுக்கு செயலமர்வு

யாழ்.வலயப் பாடசாலைகளில் தரம் 7 முதல் 11 வரையான மாணவர்களுக்கு சமூகக்கல்வியும் வரலாறும் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான கண்ணிவெடி விழிப்புணர்வு செயலமர்வு ஒன்று இன்று யாழ்.வலய கல்வி அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

காலை 8.30 மணி முதல் மாலை 5.30 மணிவரையும் நடைபெறவுள்ள இந்த செயலமர்வில் யாழ்.வலயத்துக்கு உட்பட்ட பாடசாலைகளில் மேற்குறிப்பிட்ட வகுப்புக்களில் கற்பிக்கும் ஆசிரியர்களை தவறாது கலந்துகொள்ளுமாறு யாழ்.வலய கல்விப்பணிப்பாளர் பா.விக்னேஸ்வரன் கேட்டுள்ளார். (58)

★ ★ ★ ★

யாழ்.வலய பாடசாலைகளில் விஞ்ஞானமும் தொழில்நுட்பமும் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான செய்முறை செயலமர்வு ஒன்று இன்று யாழ். இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது. இதில் தரம் 10 இற்கு விஞ்ஞானமும் தொழில்நுட்பமும் கற்பிக்கும் ஆசிரியர்களைத் தவறாது கலந்துகொள்ளுமாறு யாழ். வலயக் கல்விப்பணிப்பாளர் கேட்டுள்ளார். (58)

## குமுதினி படகின் திருத்தவேலைகள் ஆரம்பம்

(நெடுந்தீவு)

நெடுந்தீவு - குறிகட்டுவான் இடையிலான பயணிகள் படகுசேவையில் ஈடுபட்ட குமுதினி படகின் திருத்த வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

திருத்தவேலை மேற்கொள்ளும் நோக்குடன் கடலிலிருந்து கரைக்குப் படகினை ஏற்றும்போது ஏற்பட்ட சேதம், திருத்தம் மற்றும் நீர் உட்புகாதவாறு பலகைப் பொருத்துக்களிடையே கலப்பத்து அடித்தல் ஆகிய வேலைகள் முடிந்ததும், படகின் அடிப்பாகத்துக்கு தகடு பொருத்தும் வேலை ஆரம்பிக்கப்படுமெனவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்த வாரத்தில் ஆரம்பிக்கப்பட்ட வேலைகள் அனைத்தும் முடிவடைந்து மீண்டும் சேவையில் மே மாத ஆரம்பத்தில் குமுதினிப்படகு ஈடுபடுத்தப்படுமெனக் கூறப்படுகிறது. (113)


## சிறு விளம்பரம்

### மணமகள் தேவை

இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த கொழும்பில் சொந்த ஸ்தாபனத்தில் வர்த்தகம் செய்யும் வயது 29 லக்கினத்தில் செவ்வாயுடைய மணமகனுக்கு படித்த அழகிய மணமகள் தேவை. தொடர்பு:- G.புஸ்பராஜா, 3/11, பிரப்பங்குளம் லேன், வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.
T.P:- 0776231006 (649)

**யசோ இறபர் ஸ்டாம்**

75/=

பேர்லிமர் கொம்பியூட்டர் இறபர் சீல் ரூபா 75/= மட்டுமே

யசோ (PVT) லிமிட்டட்,
35, கன்னாதிட்டி வீதி,
யாழ்ப்பாணம். (சி/2152)

**ராஜா** யாழ்ப்பாணம்.

பார்த்தீபன், விக்னேஸ் நடித்த




(சி-2197)

10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே)

**நிறஞ்சனாஸ்** சங்கானை

விக்ரம், த்ரிஷா நடித்த

**சாமி**

காட்சி நேரம் : 11.00, 2.45, 6.00 (பு.நே.)
வெள்ளி, சனி, ஞாயிறு : இரவு 8.45 (பு.நே)

CHICACO (சி-2196)

## முகவர்கள் தேவை

பிரபலம் வாய்ந்த காப்புறுதி நிறுவனத்துக்கு யாழ். மாவட்டத்தில் பிரதேச ரீதியாக காப்புறுதி முகவர்கள் தேவை. ஆர்வமுடையோர் 07.03.2004 க்கு முன்னர் விண்ணப்பிக்கவும்.

**தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி :-** விளம்பர இல 25, மே/பா நமது ஈழநாடு, 267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (648)

## இலக்கிய நூல்களுக்கான பரிசுத்திட்டம் - 2003

வடக்கு - கிழக்கு மாகாணசபைக்கு உட்பட்ட 8 மாவட்டங்களையும் சேர்ந்த எழுத்தாளர்களிடமிருந்து இலக்கிய நூல்களுக்கான பரிசு வழங்கும் திட்டத்திற்கு நூல்கள் எதிர்பார்க்கப்படுகின்றன. பின்வரும் துறைகளில் போட்டிகள் இடம்பெறும்.

01. நாவல்
02. சிறுகதை
03. கவிதை
04. நாடகம்
05. சிறுவர் இலக்கியம்
06. இலக்கிய ஆய்வும் விமர்சனமும்
07. உயர்கல்விக்கான நூல்கள்

மேற்காட்டப்பட்ட துறைகளைச் சாராத நூல்களையும் போட்டிக்கு அனுப்பிவைக்கவும்.

### போட்டி விதிகள்

01. ஒரு எழுத்தாளர் எல்லாப் போட்டிகளிலும் கலந்து கொள்ளலாம்.
02. பங்குபற்றும் எழுத்தாளர் வடக்கு - கிழக்கு மாகாண சபைக்கு உட்பட்ட 8 மாவட்டங்களில் ஒன்றைச் சேர்ந்தவராக இருத்தல் வேண்டும்.
03. நூல்கள் 2003 ஆம் ஆண்டு ஜனவரி 1 ஆந் திகதி தொடக்கம் டிசம்பர் 31 ஆந் திகதிக்குள் அச்சில் வெளிவந்ததாக இருத்தல் வேண்டும்.
04. போட்டியாளர்கள் ஒவ்வொரு போட்டிக்கு நூல்களை அனுப்பும்போது நான்கு பிரதிகள் அனுப்புதல் வேண்டும்.
05. போட்டிகளில் நடுவர்களின் தீர்ப்பே இறுதியானதாகும்.

நூல் பிரதிகளை அனுப்ப விரும்புவோர் எதிர்வரும் யூன் 15ஆந் திகதிக்கு முன்னர்


உதவிப்பணிப்பாளர்,
பண்பாட்டலுவல்கள் திணைக்களம்,
கல்வி அமைச்சு,
திருகோணமலை.

என்ற முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பிவைத்தல் வேண்டும்.


ஆர்.தியாகலிங்கம்
*செயலாளர்.*

(சி-2265)


# கண்ணீர் அஞ்சலி







| | ரெங்கசாமி ஜெகதீஸ்வரன் | இராமசாமி சிவசுப்பிரமணியம் | சண்முகநாதன் சதுமுகன் |
|---|---|---|---|
| பிறப்பு | 29.09.1983 | 14.04.1938 | 22.12.1983 |
| இறப்பு | 25.02.2004 | 26.02.2004 | 27.02.2004 |

நேற்றுவரை எம்முடன் உறவாடி
ஒன்றாகப் பேசிச்சிரித்து பணியாற்றிய
உத்தமரே!
போரோய்ந்த பொழுதில்
உம் பூதவுடல்கள்
விபத்து என்னும் பேரரக்கனுக்கு
பலியானதுவே!

எமது பணியாளர்களான செல்வன்.ரெ.ஜெகதீஸ்வரன், திரு.இ.சிவசுப்பிரமணியம், செல்வன்.ச.சதுமுகன் ஆகியவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கும், உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிப்பதோடு, ஆத்மா சாந்திக்காக கண்ணீரப் பூக்களை காணிக்கையாக்குகின்றோம்.

பணிப்பாளர், பொறுப்பாளர்கள்,
பணியாளர்கள்,
*ஆயப்பகுதி*

(சி/2267)

# சமாதான முன்னெடுப்பின் வெற்றிக்கு இந்தியா பூரண ஆதரவை வழங்கும்!

## இலங்கைக்கான முன்னாள் அமெரிக்கத் தூதுவர் கருத்து

தென்னாசியப் பிராந்தியத்தில் இலங்கையின் விடயத்தில் இந்தியா தற்போது கண்டும் காணாத கொள்கையைக் கடைப்பிடித்து வருகின்றபோதும், இலங்கையின் சமாதான முன்னெடுப்புக்கள் வெற்றிகரமாக நடைபெற இந்தியா தனது ஆதரவை வழங்குமென அமெரிக்கா எதிர்பார்க்கின்றது.

இவ்வாறு இலங்கைக்கான முன்னாள் அமெரிக்கத் தூதுவரும், தற்போதைய தென்னாசியப் பிராந்தியத்திற்கான நிகழ்ச்சித்திட்ட பணிப்பாளருமான ரெறசிற்றா ஷாபர் தெரிவித்தார்.

இந்தியாவின் அனுசரணை இல்லாமல் இலங்கையில் நிரந்தரத் தீர்வொன்றைக் காண முடியாது. அயல்நாடான இலங்கையுடன் இந்தியா நீண்டகால முரண்பாடான வரலாற்றைக் கொண்டுள்ளது. இதனால்தான் இலங்கைப் பிரச்சினையில் ஆழமாகத் தலையிடாமல் இந்தியா ஒதுங்கியுள்ளதென நான் நினைக்கின்றேன்.

இலங்கையில் நிலையான தீர்வு ஏற்படுவதற்கு என்ன தேவையென்ற ஆலோசனையை இரு கட்சிகளுக்கும் வழங்கலாம். இதன்மூலம் வன்செயலை முடிவுக்குக் கொண்டுவந்து இலங்கை ஒரு நாடு என்ற வகையில், சகல சமூகத்தவரும் உள்ளடக்கப்பட்ட ஒரு உண்மையான அரசியற்தீர்வைக் காணலாம். இவ்வாறு ஏற்படும் தீர்வே நிலையானதாக இருக்கும்.

தற்போது நடைபெற்றுவரும் சமாதான முயற்சியானது முன்னர் நடந்தவற்றைவிட வித்தியாசமானது. ஏனெனில், தற்போதைய சமாதான முயற்சியில் கட்சிகள் உண்மையான முரண்பாடுகளை பேசுவதாலாகும்.

ஆனாலும், இவ்வாறு முரண்பாடான விடயங்களை பேசுவதே சமாதான முயற்சியின் முன்னெடுப்பிற்கு பிரச்சினையாகவுள்ளது. இலங்கையின் ஜனாதிபதி சந்திரிகா, கடந்த நவம்பர் மாதம் ரணில் தலைமையிலான அரசிடமிருந்து மூன்று அமைச்சுக்களைப் பறித்ததும் அங்கு ஒரு அரசியல் நெருக்கடிநிலை ஏற்பட்டு தேர்தல் நடக்கவிருப்பது திடீரென ஏற்பட்டதல்ல.

இதற்குக் காரணம் விடுதலைப் புலிகள் தமது இடைக்கால அதிகாரசபை முன்மொழிவுகளை அரசிடம் கையளித்ததனாலாகும்.

இந்த இடைக்கால தன்னாட்சி அதிகார சபையல், இலங்கையில் வாழும் சகல சமூகத்தவரது நலன்கள் கவனிக்கப்படாமல் தனியே ஒரு சமூகத்தின் நலன்கள் மட்டும் கவனிக்கப்பட்டமையே இந்த அரசியல் நெருக்கடிக்குக் காரணமாகும்.

இதன்மூலம் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க புலிகளுடன் செய்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பின்னான பேச்சுவார்த்தையில் அவர்களுக்கு அதிகளவு சலுகைகளைக் கொடுத்துவிட்டாரென ஜனாதிபதி சந்திரிகா - பிரதமரை குற்றஞ்சாட்டியிருந்தார்.

இதன்மூலம் விடுதலைப் புலிகள் ஒரு நுணுக்கமான பிரச்சினைக்குள் தள்ளப்பட்டனர். 1995 ஆம் ஆண்டு அவர்கள் இவ்வாறான பிரச்சினைக்குள் தள்ளப்படவில்லை. அந்த நேரம் புலிகள் ஒரு தீர்வுத்திட்டம் தொடர்பாக அரசாங்கத்துடன் பேசுவதற்கு விருப்பம் கொண்டிருக்கவில்லை. ஆனால் இப்போது அவர்கள் ஒரு புதிய மாகாண ஆட்சி என்ற நிலைக்குள் பிரவேசித்துள்ளனர்.

இலங்கையின் அரசியல் நெருக்கடி தொடர்பாக ஜனாதிபதி சந்திரிகா புதிய நாடாளுமன்றத் தேர்தலுக்கு உத்தரவிட்டதற்கு காரணம் ஜனாதிபதியும் பிரதமரும் எதிரெதிர் கட்சிகளாக இருப்பதனாலாகும்.

இலங்கையில் இருவேறுபட்ட அரசாங்கங்கள் இருக்கக் கூடியவாறு அந்த நாட்டின் அரசியலமைப்பு வரையப்படவில்லை. ஒரு கட்சியில் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியும் அதிகாரமற்ற பிரதமரும் நாட்டை ஆள்வது தொடர்பாகவே அரசியலமைப்பு வரையப்பட்டுள்ளது.

எவ்வாறெனினும் நடைமுறையிலுள்ள நாடாளுமன்றத் தேர்தலின் மூலம் ஆட்சிக்கு வரும் அரசாங்கம் சமாதான முயற்சியை முன்னெடுக்கும் என நான் நம்புகிறேன். ஆனாலும் தேர்தல் முடிந்த பின்னரேயே இந்த சமாதான முயற்சியை யார் முன்னெடுப்பார்கள் என்பது தெரியவரும்.

1995 ஆம் ஆண்டுக்கு பின்னர் புலிகளின் தந்திரங்கள் பெருமளவில் மாற்றம் கண்டுள்ளன. இவர்களின் இந்த மாற்றம் மிகப் பெரிய முக்கியமானதாகும். அத்துடன், புலிகள் யுத்த நிறுத்தத்தை மேற்கொண்டு, சமாதான பேச்சுவார்த்தையை அரசாங்கத்துடன் நடத்த முன்வந்தமை, சமாதானப் பேச்சுவார்த்தை முறிவடைந்தபோதும் அவர்கள் யுத்தநிறுத்தத்தை கடைப்பிடித்து வருவதெல்லாம் அவர்களின் மதிப்பீட்டினைக் காட்டுகிறது. ஆனாலும் விடுதலைப் புலிகள் அமைக்க நினைக்கும் சுதந்திரமான தமிழரசை அவர்களால் அடையமுடியாது.

அத்துடன் - 1999, 2000 ஆம் ஆண்டு காலப் பகுதியில் விடுதலைப் புலிகள் மரபு வழிப்படையாக தொடர்ச்சியாக ஆறு மாத காலப் பகுதியில் யுத்தத்தை மேற்கொண்டனர்.

இதன்போது அவர்கள் பெரும்பாலான போராளிகளை இழந்துள்ளனர். இதுகூட அவர்களை சமாதானப் பேச்சுக்குத் திரும்ப வழி செய்திருக்கும்.

விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகளால் சர்வதேச ரீதியாக அவர்களுக்கு நல்ல பெயர் இருக்கவில்லை. ஆனால், தற்போதைய அவர்களது நடவடிக்கையால்கூட சர்வதேச ரீதியில் மாற்றம் ஏற்பட்டுள்ளதா என்பதற்கான பதில் அவர்களுக்குக் கூடத் தெரியாமல் இருக்கலாம் என நான் நினைக்கின்றேன்.


தமிழ் சிறுபான்மை இனத்தவருடனும் விடுதலைப் புலிகளுடனும் அதிகாரத்தைப் பரவலாக்குவது தொடர்பாக சிங்களப் பெரும்பான்மை இனத்தவருடன் சேர்ந்து ஜனாதிபதி எதிர் நிலைப்பாட்டுடன் இருப்பாராகவிருந்தால், அதுதான் இப்போதுள்ள மிகப் பெரிய பிரச்சினையாக இருக்கும்.

சமாதான முயற்சி மேலும் தொடராமல் இருக்க பிரதமருடன் ஜனாதிபதி முரண்பட்டது இந்த எண்ணத்தில்தானோ தெரியவில்லை. இந்த இருவருக்கும் இடையிலான அதிகாரப் போட்டியால் நாட்டிற்கு பிரச்சினையைத் தீர்க்கக் கிடைக்க நல்லதொரு சந்தர்ப்பம் இழக்கப்பட்டு விட்டது.

இந்தப் பிரச்சினையை நல்லமுறையில் தீர்த்தாலேயே இந்த நாட்டின் வருங்காலம் நன்றாக அமையுமென அவர் மேலும் தெரிவித்தார்.

# இலங்கை உள்நாட்டு விவகாரங்களில் தேவையின்றித் தலையிட வேண்டாம்!

## பிரிட்டிஷ் வெளியுறவு அமைச்சருக்கு கதிர்காமர் கண்டனம்!



(கொழும்பு)

இலங்கையின் உளநாட்டு அரசியல் விவகாரங்களில் தேவையில்லாமல் தலையீடு செய்ய வேண்டாமென ஊடகத்துறை அமைச்சரும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் ஆலோசகருமான லக்ஷ்மன் கதிர்காமர் - பிரிட்டிஷ் வெளியுறவு அமைச்சர் மைக் ஓ பிறெயினுக்கு கண்டனம் தெரிவித்தார்.

நாடாளுமன்றத் தேர்தல் நடவடிககைளால் சமாதான முயற்சிகளுக்கு பாதிப்பு ஏற்படாத வகையிலும் - யுத்த நிறுத்தத்தை பாதிக்காத வகையில் அரசியல்வாதிகள் நடந்துகொள்ள வேண்டும் என பிரிட்டிஷ் வெளியுறவு அமைச்சர் மைக் ஓ பிறெயின் கடந்த செவ்வாய்க் கிழமை எச்சரிக்கை விடுத்திருந்தார்.

நீதியாகவும் நியாயமாகவும் தேர்தல் நடைபெறவேண்டும் என்பதுடன் வாக்காளர்கள் தமது மனச்சாட்சிப்படி வாக்களிக்கவேண்டும் என அவர் கேட்டிருந்தார்.

பிரிட்டிஷ் வெளியுறவு அமைச்சரின் இந்தக் கருத்தை கடுமையாகக் கணடித்துள்ள அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர், அது தொடர்பாக மேலும் தெரிவித்ததாவது

நானும் வெளிவிவகார அமைச்சராக இருந்துள்ளேன். ஆனால் எந்த வெளிநாட்டு உள்நாட்டு விவகாரங்களிலும் தலையிட்டது கிடையாது. 1931 ஆம் ஆண்டு முதல் இலங்கையில் ஆண்கள், பெண்கள் அனைவருமே தமது வாக்குரிமையைச் செலுத்திவருகின்றனர்.

நாங்கள் அரசியலில் வெறும் கற்றுக்குட்டிகள் அல்ல. அதனால் எமக்கு எவரும் அறிவுரை வழங்கத் தேவையில்லை. அத்துடன் இலங்கையர்கள் சமாதான முயற்சிகள் குறித்து தவறாக எடைபோடக் கூடிய அளவுக்கு முட்டாள்களும் அல்ல.



விடுதலைப்புலிகளும் யதார்த்தபூர்வமான இயககம்தான். அவர்களும் சமாதான முயற்சிகள் குறித்து குறைத்து மதிப்பிடமாட்டார்கள்.

சில வேளைகளில் அரசியல்வாதிகள் முட்டாள்களாக இருக்கலாம். ஆனால் மக்கள் புத்திசாலிகள் என்பதால் அரசியல் கட்சிகளுக்கு சரியான தீர்ப்பை வழங்குவார்கள். அதில் நீங்கள் தலையீடு செய்யவோ, ஆலோசனை வழங்கவோ தேவையில்லை என கதிர்காமர் குறிப்பிட்டார்.

## சந்திரிகாவுக்கு எதிராக ஒலுவிலில் ஆர்ப்பாட்டம்!

ஒலுவில் துறைமுக செயற்திட்ட நஷ்டஈட்டுக் கொடுப்பனவுகளுக்காக அமைச்சரவை அங்கீகரித்த 555.8 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டை அங்கீகரித்து உறுதிப்படுத்த வேண்டாமென ஜனாதிபதி பணிப்புரை விடுத்ததை ஆட்சேபித்து ஒலுவில் பிரதேச மக்கள் நேற்று முன்தினம் பெரும் ஆர்ப்பாட்டப் பேரணியொன்றை நடத்தினர்.

ஒலுவில் துறைமுக செயற்திட்டத்திற்கெனத் தமது காணிகளை வழங்கியவர்களுக்கு உடனடியாக நஷ்டஈடு வழங்குவதுடன், ஒலுவில் துறைமுக செயற்திட்ட இழுத்தடிப்பு நாடகம் இன்னும் தொடரக்கூடாது தெனவும் ஆர்ப்பாட்டத்தில் வலியுறுத்தப்பட்டது. ஒலுவில் மஸ்ஜிதுல் அரபாதைக்கியாப் பள்ளிவாசல் வீதியில் ஒரு மணிநேரம் இந்த ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

"சந்திரிகாவே உன்வேசம் கலைந்துவிட்டது, இன்னும் நாம் ஏமாறமாட்டோம்" - "பேரியலே, நம் தலைவரின் கனவைச் சிதைக்க நீரும் உடந்தையா?" - "அஷ்ரபின் கனவு எமது மூச்சு" - "ஜே.வி.பியின் அரவணைப்பு இரகசியம் ஒலுவில் துறைமுக நிர்மாணத்தை இல்லாமல் செய்வதா?" - "பேரியலே, உங்கள் தயவுடனா எமது கொடுப்பனவுக்குத் தடை" - "எங்கள் துறைமுக நஷ்டஈட்டைத் தடுத்து அரசியல் இலாபம் தேடாதே" - "தலைவர் காட்டிய தலைவரே ஜே.வி.பி. கூட்டின் உங்களது அச்சம் நியாயமானதே" - என்பன போன்ற வாசகங்களைக் கொண்ட சுலோக அட்டைகளை ஆர்ப்பாட்டப் பேரணியில் கலந்து கொண்டோர் ஏந்தியிருந்தனர்.

# மக்கள் சுதந்திர முன்னணியால் நாட்டுக்கு பெரும் தீய விளைவுகள்!

## ஐ.தே.க. வேட்பாளர் சரத் கோன்கஹுவே

பொதுஜன ஐக்கிய முன்னணியும் மக்கள் விடுதலை முன்னணியும் இணைந்து ஏற்படுத்திய கூட்டமைப்பினால் நாட்டின் முன்னேற்றத்திற்கு தீங்கு விளைவிக்கக் கூடிய பல்வேறு தடைகள் ஏற்பட்டுள்ளன.

இவ்வாறு ஐக்கிய தேசியகட்சியின் வேட்பாளர் சரத் கோன்கஹுவே தெரிவித்தார்.

தென்னிலங்கை ஊடகம் ஒன்றுக்கு கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது -

இதுவரையும் எந்த அரசாங்கமும் செய்யாத சாதனையை ஐக்கிய தேசியக் கட்சி செய்துள்ளது. கடந்த இரண்டு வருடங்களாக குண்டுவெடிப்புக்கள் இல்லாமல் மக்கள் வேலைக்குச் செல்லவும் சிறுவர்கள் பாடசாலைக்கு செல்லவும், பயம் வன்முறை தீவிரவாதத் தாக்குதல் இல்லாத ஒரு காலத்தை உருவாக்கியுள்ளது.

தற்போதைய தேர்தல் தேவையற்றது. இதன்மூலம் ஜனாதிபதி இந்தச் சாதனையை மழுங்கடிக்கக் முயற்சித்துள்ளார்.

ஐக்கிய தேசிய கட்சி அரசாங்கத்துடன் விடுதலைப் புலிகளுடன் பேச மக்கள் அங்கீகாரத்தை வழங்கியுள்ளனர்.

சர்வதேச சமுகம் பேச்சுவார்த்தையை ஆரம்பிக்க வேண்டும் என்பதுடன் பொதுஜன ஐக்கிய முன்னணி 2000 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்திய அதிகாரப் பரவலாக்கத்தினை ஏற்றுக்கொள்ளவேண்டும் என்பதை வொஷிங்ரனில் மிகத் தெளிவாக குறிப்பிட்டிருந்தனர்.

இந்தநிலையில் கூட்டமைப்பின் கொள்கைகளும் மக்கள் விடுதலை முன்னணியும் இதற்கு எதிராகவே இருந்து வருகின்றன.

இதன்மூலம் பல்வேறு சிக்கல்கள் உருவாகலாம். அத்துடன் நாட்டின் முன்னேற்றத்திற்கு பாதிப்பை ஏற்படுத்தும்.

ஜே.வி.பியின் தலைவர் சோமவன்ச அமரசிங்க ஜனாதிபதியின் கணவர் விஜயகுமாரதுங்கவை கொலைசெய்ய தீர்மானித்த ஜே.வி.பியின் மூன்றாவது சந்தேக நபர் எனவும் சரத் கோன்கஹுவே தெரிவித்தார்.

# தேர்தலில் பிக்குகள் போட்டி; எமக்கு எந்த பாதிப்புமில்லை!

## விமல் வீரவன்ச தெரிவிப்பு



(கொழும்பு)

எதிர்வரும் நாடாளுமன்றப் பொதுத் தேர்தலில் புத்தபிக்குகள் போட்டியிடுவதால் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படாது என ஜே.வி.பியின் பிரசாரச் செயலாளர் விமல் வீரவன்ச தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது -

தேர்தலில் போட்டியிடும் உரிமை ஒவ்வொருவருக்கும் உள்ளது. ஆனால் புத்தபிக்குகள் எதிர்வரும் தேர்தலில் போட்டியிடுவது சரியா? தவறா? என்பதனை சங்கசபாவைச் சேர்ந்த சிரேஷ்ட புத்த பிக்குகள்தான் தீர்மானிக்க வேண்டும். இது தொடர்பாக நாம் ஏதாவது செய்ய எமக்கு எவ்வித உரிமையுமில்லை எனத் தெரிவித்தார்.

இதேவேளை - மக்கள் ஐக்கிய முன்னணியின் தலைவர் தினேஷ் குணவர்த்தன இது தொடர்பாகக் கருத்துத் தெரிவிக்கையில் - ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியைப் பார்த்து புத்தபிக்குகள் எவ்விதததிலும் பயப்படத் தேவையில்லை. புத்தபிக்குகளின் உரிமைகளை ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி பாதுகாக்கும். சிறிலங்கா சுதந்திரக் கட்சி பௌத்த மததததையும், பௌத்த பிக்குகளைப பாதுகாத்தே வந்துள்ளதெனத் தெரிவித்தார்.

# இங்கிலாந்து, சிம்பாப்வே அணிகள் அரையிறுதிக்கு தெரிவாகியுள்ளன



- குக்

(டாக்கா)

பங்களாதேஷில் நடைபெற்றுவரும் 19 வயதுக்குட்பட்டோருக்கான உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டியில், நேற்று முன்தினம் டாக்காவில் நடந்த இருவேறு போட்டிகளில் இங்கிலாந்து - பாகிஸ்தானையும், சிம்பாப்வே-நியூஸிலாந்தையும் தோற்கடித்தன.

பாகிஸ்தான், இங்கிலாந்து அணிகளுக்கிடையில் டாக்காவில் நடந்த போட்டியில், முன்னதாக நாணயச் சுழற்சியில் வென்ற பாகிஸ்தான் முதலில் இங்கிலாந்தைத் துடுப்பெடுத்தாடுமாறு பணித்தது.

இதன்படி துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து வீரர்கள், பாகிஸ்தான் அணியினரின் பந்து வீச்சுக்கு முகம்கொடுக்க முடியாமல் ஓட்டம் எடுப்பதில் சிரமப்பட்டதுடன் விக்கெட்டுக்களையும் இழந்தனர்.

இந்த அணியின் சார்பாக ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் குக் 87, முதலாவது ஆட்டக்காரர் டேவிஸ் 53. இருவரும் கூடுதலான ஓட்டங்களைப் பெற்றதுடன் மற்றைய அனைவரும் பதினொன்றுக்குக் குறைவான ஓட்டங்களையே பெற்றனர். இறுதியில் நிர்ணயிக்கப்பட்ட ஐம்பது ஓவர்களில் இங்கிலாந்து அணி அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 196 ஓட்டங்களை மட்டுமே பெற்றது.

பந்துவீச்சில் அப்ரிடி 5, இம்ரான் 3, அம்ஜாட், ம.்.மூட் இருவரும் தலா ஒவ்வொரு விக்கெட்டைக் கைப்பற்றினர்.

197 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் ஆடத்தொடங்கிய பாகிஸ்தான், 47.4 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 190 ஓட்டங்களைப் பெற்றதன் காரணமாக ஆறு ஓட்டங்களால் தோல்வியைத் தழுவியது.

இந்த அணி சார்பாக - ஹெய்டர் 44, ஹைடிர் 37, சகீர், அலாம் இருவரும் 20, அம்ஜாட் 21 ஓட்டங்களைக் கூடுதலாகப் பெற்றனர்.

பந்துவீச்சில் பிறெஸ்னன், ஹரிசன் இருவரும் 3, லோஷன் 2, பிளங்கெற், பட்டேல் இருவரும் தலா ஒவ்வொரு விக்கெட்டையும் கைப்பற்றினர். இந்தப் போட்டியின் ஆட்ட நாயகனாக இங்கிலாந்தின் குக் தெரிவானார்.

டாக்காவில் நடந்த - சிம்பாப்வே, நியூஸிலாந்து அணிகளுக்கிடையிலான மற்றொரு போட்டியில் சிம்பாப்வே 92 ஓட்டங்களால் நியூஸிலாந்தைத் தோற்கடித்தது.

முன்னதாக நாணயச் சுழற்சியில் வென்ற சிம்பாப்வே முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. இதன்படி, முதலில் ஆடிய சிம்பாப்வே நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்களில் எட்டு விக்கெட்டுக்களை இழந்து 272 ஓட்டங்களைப் பெற்றது.

இந்த அணிசார்பாக, ஆரம்பத்துடுப்பாட்ட வீரர் ரெய்லர் 145 பந்துகளை எதிர்கொண்டு 18 பவுண்டரிகள் ஒரு சிக்ஸர் அடங்கலாக 127 ஓட்டங்களையும், முபாம்சி 27 பந்துகளில் 45 ஓட்டங்களையும் கூடுதலாகப் பெற்றனர்.

பந்து வீச்சில் ரிடேவிஸ் 2, புறூன்ஸ் ரெயின், டிவிசிச் இருவரும் தலா ஒவ்வொரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய நியூஸிலாந்து 42 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து, 180 ஓட்டங்களை எடுத்ததனால் 92 ஓட்டங்களால் தோல்வியைத் தழுவியது.

இந்த அணிசார்பாக டேவிஸ் 44, டிபோடர் ஆட்டமிழக்காமல் 28, வில்சன் 20 ஓட்டங்களைப் பெற்றனர். இந்தப் போட்டியின் ஆட்ட நாயகனாக ரெய்லர் தெரிவானார்.

## வடமராட்சி வலயப் பாடசாலைகளின் கரப்பந்தாட்டச் சுற்றுப்போட்டி முடிவுகள்

வடமராட்சி வலயப் பாடசாலைக்களுக்கிடையிலான கரப்பந்தாட்டச் சுற்றுப்போட்டி கடந்த 22 ஆம் 23 ஆம் திகதிகளில் நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது.

இதில் 15 வயதிற்குட்பட்ட பிரிவில் - 1ஆம் இடத்தை உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கலலூரியும், 2 ஆம் இடத்தை நெல்லியடி மத்திய மகா வித்தியாலயமும், 3 ஆம் இடத்தை வேலாயுதம் மகா வித்தியாலயமும் பெற்றன.

17 வயதிற்குட்பட்ட பிரிவில் - 1ஆம் இடத்தை உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரியும், 2 ஆம் இடத்தை இமையாணன் அ.த.க.பாடசாலையும், 3 ஆம் இடத்தை விக்னேஸ்வராக் கல்லூரியும் பெற்றன.

19 வயதிற்குட்பட்ட பிரிவில் - 1 ஆம் இடத்தை உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கலலூரியும், 2 ஆம் இடத்தை விக்னேஸ்வராக் கல்லூரியும், 3 ஆம் இடத்தை ஞானசாரியார் கல்லூரியும் பெற்றன.

இதில் 1 ஆம், 2 ஆம் இடத்தைப்பெற்ற பாடசாலைகள் மாவட்ட மட்டப் போட்டிக்கு தெரிவாகியுள்ளன என்று வடமராட்சி வலய உடற்கல்வி உதவிக்கல்விப் பணிப்பாளர் வி.வல்லிபுரம் தெரிவித்தார். (12)

## கோட்டமட்ட மெய்வன்மைப் போட்டி

(கரவெட்டி)

கரவெட்டி கோட்டமட்டப் பாடசாலைகளுக்கு இடையேயான மெய்வன்மைப் போட்டிகள் - எதிர்வரும் 3 ஆம், 4 ஆம், 5 ஆம் திகதிகளில் நெல்லியடி மத்திய மகா வித்தியாலய மைதானத்தில் காலை 8 மணிக்கு நடைபெறவுள்ளன என, வடமராட்சி வலய உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் வி.வல்லிபுரம் தெரிவித்தார். (12)

## வலி. தெற்கு பிரதேச செயலக வருடாந்த விளையாட்டுவிழா

(உடுவில்)

வலி.தெற்குப் பிரதேச செயலகப் பிரிவின் வருடாந்த விளையாட்டு விழா - நாளை பிற்பகல் 2 மணிக்கு கந்தரோடை ஸ்கந்தவரோதயாக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

வலி.தெற்குப் பிரதேச செயலர் சி.திருவாகரன் தலைமையில் நடைபெறும் இந்த விளையாட்டுப் போட்டிக்கு - மல்லாகம் மாவட்ட நீதிபதி சறோஜினி இளங்கோவன் பிரதம விருந்தினராகவும், மாவட்ட விளையாட்டு அதிகாரி இ.றொகான் இராஜசிங்கம், ஸ்கந்தா அதிபர் க.சிவாஜி, வலிகாமக் கோட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் சி.வெ.தமிழ்மாறன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொள்ளவுள்ளனர். (101)

## தெல்லிப்பளைக் கோட்ட கரப்பந்தாட்ட முடிவுகள்

தெல்லிப்பளைக் கல்விக்கோட்ட கரப்பந்தாட்டப்போட்டி முடிவுகள் பின்வருமாறு -

**15 வயதுப்பிரிவு**

1 ஆம் இடம் அருணோதயாக்கல்லூரியும் 2 ஆம் இடம் மகாஜனாக்கல்லூரியும், 3 ஆம் இடம் வசாவிளான் மகாவித்தியாலயமும் பெற்றுள்ளன.

**17 வயதுப்பிரிவு**

1 ஆம் இடம் இளவாலை மெய்கண்டான் மகாவித்தியாலயமும், 2 ஆம் இடம் அருணோதயாக் கல்லூரியும் , 3 ஆம் இடம் மகாஜனாக் கல்லூரியும் பெற்றுள்ளன.

**19 வயதுப்பிரிவு**

1 ஆம் இடம் மகாஜனாக் கல்லூரியும், 2 ஆம் இடம் யூனியன் கல்லூரியும், 3 ஆம் இடம் இளவாலை மெய்கண்டான் மகா வித்தியாலயமும் பெற்றன. (72)

# விளையாட்டு

# இலங்கையைத் தோற்கடித்ததன் மூலம் அவுஸ்ரேலியா தொடரைக் கைப்பற்றியது

இலங்கை - அவுஸ்ரேலிய அணிகளுக்கிடையே நேற்றுமுன்தினம் பிரேமதாஸ விளையாட்டரங்கில் நடந்த நான்காவது பகலிரவுப் போட்டியில், அவுஸ்ரேலியா 40 ஓட்டங்களால் இலங்கையைத் தோற்கடித்தது.

முன்னதாக நாணயச்சுழற்சியில் வென்ற அவுஸ்ரேலியா - முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. இதன்படி, முதலில் ஆடிய அவுஸ்ரேலியா, இலங்கை அணியினரின் பந்து வீச்சுக்கு முகம் கொடுக்கமுடியாமல் 47.4 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 233 ஓட்டங்களை மட்டுமே எடுத்தனர்.

இந்த அணி சார்பாக, அணித்தலைவர் பொண்டிங் 67, சைமன்ட்ஸ் 53, கிளார்க் 36 ஓட்டங்களைக் கூடுதலாக பெற்றனர். இந்த அணியில் பிரட்ஹொக், கஷ்பிரோவிஷ் இருவரும் ஓட்டமெதுவும் பெறாமல் ஆட்டமிழந்தது குறிப்பிடத்தக்கது.

பந்து வீச்சில் - முரளிதரன், உபுல் சந்தன இருவரும் தலா மூன்று விக்கெட்டுக்களையும் சமிந்த வாஸ், சொய்சா, லொக்கு ஆராய்ச்சி மூவரும் தலா ஒவ்வொரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

பதிலுக்குத் துடு●பெடுத்தாடிய இலங்கை அணியின் ஆரம்பமே நன்றாக அமையவில்லை. இந்த அணி 43.4 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 193 ஓட்டங்களையே பெற்றது.

இலங்கை அணியில் சனத் ஜெயசூரிய ஓட்டம் எதுவும் பெறாமலும், அத்தப்பத்து 19, சங்ககார 110 பந்துகளில் 15 பவுண்டரிகள் அடங்கலாக 101, ஜெயவர்த்தன 25, உபுல் சந்தன 13, லொக்கு ஆராய்ச்சி 18 ஓட்டங்களைக் கூடுதலாகப் பெற்றனர்.

சனத் ஜெயசூரிய - முதல் நடந்த போட்டியில் ஓட்டமெதுவும் பெறாமல் ஆட்டமிழந்தது போலவே, இந்தப் போட்டியிலும் ஆட்டமிழந்தார். சங்ககார 101 ஓட்டங்களைப் பெற்ற போதும் இலங்கை அணி தோல்வியைத் தழுவியது துரதிஷ்டவசமானது.

பந்து வீச்சில் கஷ்பிரோவிஷ் மிகச் சிறப்பாகப் பந்துவீசி 5 விக்கெட்டுக்களையும் பிரட்ஹொக் 2, ஜிலெஸ்பி, ஹாவி இருவரும் தலா ஒவ்வொரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

ஐந்து போட்டிகள்கொண்ட தொடரில், நடந்து முடிந்த நான்கு போட்டிகளில் அவுஸ்ரோலியா 3:1 என்ற நிலையில் வென்று ஒருநாள் தொடரைக் கைப்பற்றியது. இறுதிப் போட்டி இன்று கொழும்பு எஸ்.எஸ்.சி மைதானத்தில் பகலப் போட்டியாக நடைபெறும்.



- கஷ்பிரோவிஷ்

# தமிழ் உணர்வை மழுங்கடிக்கமுயலும் ஜெயலலிதா கூட்டணியை ஒழிக்கவேண்டும்

## ம.தி.மு.க தலைவர் வைகோ தெரிவிப்பு

ம.தி.மு.க பொதுச் செயலாளர் வைகோ சிறையிலிருந்து விடுதலையான பிறகு முதல் முறையாக நேற்று அவரது சொந்த ஊரான கலிங்கப் பட்டிக்குச் சென்றார்.

அங்குசென்ற அவர் நிருபர்களிடம் கூறியதாவது -

பிரதமர் வாஜ்பாய், மதவாத சங் பரிவார் அமைப்புக்களின் கட்டுப்பாட்டுக்குள் போய்விட்டார். இந்த மதவாதக் கும்பல்கள் நாட்டுக்கே பெரும் ஆபத்தானவை. அவர்களை நாங்கள் மிகக் கடுமையாக எதிர்ப்போம்.

வாஜ்பாய் மிகப்பெரிய தலைவர்தான். அவரை மதிக்கிறேன். ஆனால், சங் பரிவாரத்துடன் கைகோர்த்துவிட்ட அவரை இனிமேல் விடமாட்டோம்.

அ.தி.மு.க - அத்வானி கூட்டணி என்று என் தலைவர் கருணாநிதி சொன்னதை நான் ஏற்கமாட்டேன். இது வாஜ்பாய் - ஜெயலலிதா கூட்டணிதான். திராவிடக் கலாசாரத்தை, தமிழ் உணர்ச்சியை மழுங்கடிக்கமுயலும் ஜெயலலிதா கூட்டணியை ஒழித்துக்கட்ட வேண்டும். மதவாதிகளுடன் சேர்ந்துகொண்டு தமிழகத்திலும் மதக்கலவரத்திற்கு அடிபோடுகிறார் ஜெயலலிதா. மதவாதத்துக்கு தமிழ்க் கலாசாரத்தில் இடமே கிடையாது.

மக்கள் இருட்டில் வாழ்கிறார்கள் எந்தநேரமும் மதக்கலவர அச்சத்தில் இருக்கிறார்கள். அதைத்தான் இந்தியா ஒளிர்கிறது என்று பா.ஜ.க.வினர் சொல்கின்றனர்.

திராவிட இயக்கத்தைக் கட்டிக் காப்பதில் தி.மு.கவுடன் ம.தி.மு.க சேர்ந்து போராடும். ஜெயலலிதாவின் அரசுதான் இதுவரை தமிழகத்தை ஆண்ட கட்சிகளிலேயே மிகவும் மோசமானது ஜெயலலிதாவையும், அவருக்கு உதவும் வாஜ்பாயையும் விடமாட்டோம் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

# மாயாவதியின் கட்சியுடன் கூட்டணி ஏற்படுத்தவில்லை

## பாரதீய ஜனதா தெரிவிப்பு

மாயாவதியின் கட்சியுடன் எந்தவிதத்திலும் கூட்டணி ஏற்படுத்தப்படவில்லை என்று பாரதீய ஜனதாக் கடசி திட்டவட்டமாக அறிவித்துள்ளது.

இவ்வாறு, பீஹார் மாநில தலைநகரான பாட்னாவில் நடைபெற்ற பாரதீய ஜனதாவின் தேர்தல் கூட்டத்தில் பேசிய அந்தக் கட்சியின் பொதுச் செயலாளர் பிரமோத் மகாஜன் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் கூறுகையில் -

இந்தியா முழுவதும் தேசிய ஜனநாயகக் கூட்டணி அலை வீசுகின்றது. இந்தக் கூட்டணி மீண்டும் ஆட்சிக்கு வருவதை யாராலும் தடுக்க முடியாது. இந்தத் தேர்தலில் - சாதிக்கட்சிகளும், சமூகரீதியான கட்சிகளும் எந்த மாற்றத்தையும் ஏற்படுத்த முடியாது.

பகுஜன் சமாஜ் கட்சியுடன் அல்லது அதன் தலைவர் மாயாவதியுடன் பாரதீய ஜனதாவுக்கு எந்தவிதத் தொடர்பும் கிடையாது. தேசிய ஜனநாயகக் கூட்டணித் தலைவர்களும் அந்தக் கட்சியுடன் எந்தவிதப் பேச்சுக்களும் வைத்துக்கொள்ளமாட்டார்கள்.

உத்தரப் பிரதேசத்தில் மட்டுமல்ல - இந்தியா முழுவதும் தேர்தலுக்கு பிறகும் இதே நிலையைக் கடைப்பிடிப்போம்.

நாங்கள் ஒருபோதும் தேர்தல் கூட்டணியாக மாயாவதியை அணுகியது கிடையாது. காங்கிரஸ் தலைவர் சோனியா காந்திதான் மாயாவதியின் வீட்டுக்கு வலியச்சென்று பிறந்த நாள் வாழ்த்துக் கூறுவதுபோல் அரசியல் நடத்துகிறார்.

பீஹாரில் ராம்விலாஸ் பஸ்வானின் லோக் ஜனசக்தி, காங்கிரஸுடன் கூட்டுச் சேர்ந்துள்ளது. இதனால், தேசிய ஜனநாயகக் கூட்டணிக்கு எந்தவித பாதிப்பும் இல்லை.

தேர்தல் பிரசாரத்தை ஒழுங்குபடுத்தி நிர்வகிக்கக்கூட காங்கிரஸில் தலைவர்கள் இல்லை என, பிரமோத் மகாஜன் கூறினார்.

# கடந்த ஆண்டில் இடம்பெற்ற வீதி விபத்துகளால் 52 பேர் பலி

## போக்குவரத்துப் பொலிஸார் தெரிவிப்பு


கடந்த ஆண்டு மட்டும் வீதி விபத்துக்களினால் யாழ்.மாவட்டத்தில் 52 பேர்வரை உயிரிழந்ததாக, யாழ. பொலிஸ் நிலையத்தின் போக்குவரத்துப் பொலிஸார் தெரிவித்தனர்.

யாழ். மாவட்டத்தில் கடந்த ஆண்டு சாதாரண சிறு விபத்துச்சம்பவங்களைவிட, 450 விபத்துச்சம்பவங்கள் இடம்பெற்றன. அவற்றில் 50 பாரிய விபத்துச் சம்பவங்களாகும். இதில் 52 பேர் உயிரிழந்தனர். இந்த 50 விபத்துக்களுடன் வேறு 300 வரையான விபத்துச் சம்பவங்களில் 63 பேர்வரை பாரிய காயங்களுக்குள்ளானதுடன், 240 பேர் வரையில் சிறு காயமடைந்துள்ளனர்.

இந்த விபத்துச் சம்பவங்களால், 106 வரையிலான வாகனங்கள் சேதமடைந்தன. இவற்றில் சுமார் ஒரு கோடி ரூபா வரையிலான சொத்துக்களும் நாசமடைந்துள்ளன.

இத்தகைய உயிர், உடமை இழப்புக்களுக்குக் காரணமான விபத்துக்களைத் தவிர்ப்பதற்கு மக்களே பொறுப்புடன் செயற்படவேண்டும். இந்த விபத்துக்கள் - சமூகத்தில் பல்வேறு பிரச்சினைகளை உருவாக்கி வருகின்றன.

மக்கள் தமது உயிர்களைப் பாதுகாப்பதில் தாமே அக்கறையுடன் செயற்படாதுவிடின், அவற்றைத் தவிர்க்கமுடியாது போய்விடும் எனப் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (ப)



யுனிசெப் நிறுவனத்தின் ஆதரவுடன் வெண்புறா செயற்கை உறுப்பு தொழில்நுட்ப நிறுவனம் நடத்திய பரிசளிப்புவிழாவை மங்கள விளக்கேற்றி ஆரம்பித்து வைப்பதைப் படத்தில் காணலாம்.

## குடும்பஸ்தரைக் காணவில்லை மனித உரிமை ஆணைக்குழுவில் புகார்

குடும்பஸ்தர் ஒருவரைக் காணவில்லை என தெரிவித்து அவரது மனைவி யாழ்.மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு தெரிவித்துள்ளார்.

இந்த முறைப்பாட்டில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது -

நோதலை இளவாலை என்னும் முகவரியைச் சேர்ந்த சந்திரசேகரம் கமலநாதன் (வயது 23) என்னும் குடும்பஸ்தர் கடந்த 17 ஆம் திகதி முதல் காணாமல் போயுள்ளார். மனைவி தனது 6 மாதக் குழந்தைக்கு மருந்தெடுப்பதற்காக வைத்தியசாலைக்கு சென்றுவிட்டு திரும்பியபோது, வீட்டில் ஓர் கடிதம் இருந்தது. அதில் - தான் ஒரு வியாபார விடயமாக சென்றுவிட்டு, மாலை திரும்புவதாக எழுதியிருந்தது.

எனினும், இதுவரை அவர் வீடு திரும்பவில்லை. இதனையடுத்தே மனைவி யாழ்.மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்துள்ளார். காணாமல் போனவர் மரக்கறி வியாபாரி எனவும் தெரிவிக்கப்படுகிறது.(ப)

## யாழ். பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர்

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத்தினர் நேற்றுமுன்தினம் ஒரு நாள் வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

மருத்துவ பீடாதிபதி க.சிவபாலன் கடந்த வாரம் அச்சுறுத்தப்பட்டதைக் கண்டிக்கும் முகமாகவும், இவ்வாறான செயற்பாடுகள் பல்கலைக்கழக சமூகத்திற்கு இனிவரும் காலங்களில் ஏற்படாது இருப்பதை உறுதி செய்யும் வகையிலும் - ஒருநாள் வேலை நிறுத்தப் போராட்டத்தை நடத்தினர்.

போராட்டத்தின்போது, பல்கலைக்கழக ஆசிரியர் சங்கச் செயலாளர் கலாநிதி சி.சிவச்சந்திரன் யாழ். பல்கலைக்கழக துணைவேந்தரிடம் மகஜர் ஒன்றைக் கையளித்தார். அந்த மகஜரில் தெரிவிக்கப்பட்டிருந்ததாவது -

மருத்துவ பீடாதிபதி க.சிவபாலன் வீட்டுக்குச் சென்று அச்சுறுத்தியவர்கள் யார் என்ற மர்மம் கண்டுபிடிக்கப்படவேண்டும்.

இனந்தெரியாதவர்களினால் அச்சுறுத்தல் நடைபெற்றமையால் பல்கலைக்கழக சமூகம் குழப்ப நிலையிலுள்ளது. இந்த நெருக்கடியிலிருந்து நாம் விடுபடவேண்டும். அச்சுறுத்தியவர்கள் இனங்காணப்பட்டு, அவர்கள் மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கவேண்டும்.

இனிவரும் காலங்களில் பல்கலைக்கழக சமூகத்திற்கு இவ்வாறான சம்பவம் நடைபெறாது இருக்க ஆவன செய்வது, பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படவேண்டும் இந்த வேலை நிறுத்தமானது, பல்கலைக்கழக செயற்பாடுகளை பாதித்தாலும், பல்கலைக்கழக சமூகம் பாதுகாப்பற்ற சூழலில் வாழ்வதையும், பணிபுரிவதையும் வெளியுலகிற்கு எடுத்துக் காட்டுவதாகவே இந்த ஒரு நாள் வேலை நிறுத்தத்தினை மேற்கொள்கின்றோம் என மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த மகஜர் - பிரதி யாழ். அரசாங்க அதிபர், யாழ். மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர், யாழ். மாவட்ட போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு மற்றும் யாழ். பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிக்கும் அனுப்பி வைக்கப்பட்டது. (தீ)

## விவசாயிகளுக்கிடையே பிணக்கு ஒருவர் அடித்துக்கொல்லப்பட்டார்

செட்டிகுளத்தில் விவசாயிகளுக்கிடையில் ஏற்பட்ட தகராறு காரணமாக ஒருவர் மண்வெட்டியால் அடித்துக் கொல்லப்பட்டார்.

வயலுக்கு நீர் பாய்ச்சுவது தொடர்பாக ஏற்பட்ட தகராறின் காரணமாகவே - சின்னக்குளத்தைச் சேர்ந்த சுப்பிரமணியம் ஜெகதீஸன் என்பவரே மண்வெட்டியால் தாக்கப்பட்டு, காயமடைந்த நிலையில் அநுராதபுரம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் மரணமடைந்தார்.

இந்தக் கொலை தொடர்பாக அதேயிடத்தைச் சேர்ந்த இராசப்பிரகாசம் என்பவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

## பலாலி ஒலிபரப்பை சீராக்க அதிகாரிகள் நடவடிக்கை

யாழ்.குடாநாட்டு மக்களுக்கு சீரான ஒலிபரப்பு சேவையினை வழங்கும் விதமாக பலாலி ஒலிபரப்பு நிலையத்தினை யாழ்ப்பாணத்தின் மத்திய பகுதிக்கு விரைவில் மாற்றுவதற்கான ஏற்பாடுகள் விரைவில் மேற்கொள்ளப்பட இருப்பதாக இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் அறிவித்துள்ளது.

இது தொடர்பாக இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன தலைவர் ஹட்சன் சமரசிங்க யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்து நேற்றுமுன்தினம் காலை பல்வேறு உத்தியோகத்தர்களையும் சந்தித்து தேவையான உத்தரவுகளை வழங்கினார்.

## யாழ். பொலிஸ் நிலையத்தில் தமிழ்ப் பொலிஸார் பற்றாக்குறை விசாரணைகள் காலதாமதம்

யாழ். பொலிஸ் நிலைய சிறு குற்றத்தடுப்புப் பிரிவில் தமிழ்மொழி மூலம் விசாரணைகள் செய்வதற்குப் பொலிஸார் பற்றாக்குறையாகவுள்ளது.

இதனால், மக்கள் விசாரணைக்கு என்று அழைக்கப்பட்டு பலமணி நேரங்களின் பின்பே விசாரணைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

சிறுகுற்றத் தடுப்புப் பிரிவில் விசாரணைகள் மேற்கொள்வதற்கு ஐந்துக்கு மேற்பட்ட பொலிஸார் உள்ளபோதிலும், தமிழ்மொழி தெரிந்த பொலிஸார் ஒருவர் மட்டுமே இருக்கின்றார்.

விசாரணைக்கு என்று அழைக்கப்பட்டு, காலையில் வரும் மக்கள் - மாலையே வீடு திரும்பக்கூடிய சூழல் சிலசமயங்களில் ஏற்படுகின்றது.

இதனால், மக்கள் தமது அன்றைய செயற்பாடுகளைச் சீரான முறையில் செய்யமுடியாதுள்ளதென கவலையடைந்துள்ளனர். (தீ)

## மகளிர் தினப் போட்டிகள்

(யாழ்ப்பாணம்)

அரியாலை அபிவிருத்திச் சங்கத்தினர், எதிர்வரும் மார்ச் -08 ஆம் திகதி - மகளிர் தினத்தை முன்னிட்டு கலைப்போட்டிகளை நடாத்தவுள்ளனர்.

கட்டுரை, கவிதை, பேச்சு ஆகிய போட்டிகளை நடாத்தும் அபிவிருத் சங்கத்தினர் இந்தப் போட்டியில் பங்குபற்ற விரும்புபவர்கள் தங்கள் விண்ணப்பங்களை அதன் செயலாளர் எஸ்.சண்முகலிங்கத்திடம் சமர்ப்பிக்கலாம். (55)

## பல்கலைக்கழகத்தில் விடியோக்காட்சி

யாழ்.பல்கலைக்கழகத்தின் ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி நிலையத்தின் ஏற்பாட்டில் நாளை காலை-10.00 மணிக்கு புவியியற்துறை மண்டபத்தில் ஜோன்ஹலஸ், ஜோய் பச்சில ஆகியவர்களின் இணை நெறியாழ்கையில் புகழ்பெற்ற நாவலாசிரியர் 'ஜோர்ஜ் ஓர்வெஸ்' எழுதிய 'விலங்குப் பண்ணை' நாவலின் திரை வடிவம் காண்பிக்கப்படும். அத்துடன், ஓவியர் கோபுலு பற்றிய விவரணப்படமும் காண்பிக்கப்படும்.

படக்காட்சியின் இறுதியில் அயேசுராசா, க.சட்டநாதன், ஏ.ஜே.கனகரட்ன ஆகியோரின் நெறிப்படுத்தல்களின் கீழ் கலந்துரையாடல் இடம்பெறும். ஆர்வமுள்ள எவரும் பங்குபற்றி பயன பெறலாமென ஊடகவளங்கள் மற்றும் பயிற்சி நிலையத்தின் இணைப்பாளர் பேராசிரியர் இரா.சிவசசந்திரன் தெரிவித்தார்.

## ஈ.பி.டி.பியினர் துண்டுப்பிரசுரம்

எதிர்வரும் ஏப்ரல் மாதம் 2 ஆம் திகதி நடைபெறவுள்ள பொதுத் தேர்தல் தொடர்பாக ஈ.பி.டி.பியினர் துண்டுப் பிரசுரங்களை விநியோகித்து வருகின்றனர்.

யாழ்ப்பாணத்தின் பலபகுதிகளிலும் இத்துண்டுப்பிரசுரங்கள் நேற்றுமுன்தினம் ஈ.பி.டி.பியினரால் விநியோகிக்கப்பட்டதை காணமுடிந்தது. (ப)

## பரீட்சை பிற்போடப்பட்டது

இந்துசமய கலாசாரத் திணைக்களத்தின் கலாசார அலுவலர், ஆராய்ச்சி அலுவலர் ஆகிய பதவிகளுக்கான போட்டிப் பரீட்சை முறையே மார்ச் மாதம் 13, 14 ஆம் திகதிகளில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டிருந்தபோதும், தவிர்க்கமுடியாத காரணத்தினால் இந்தப்பரீட்சை ஜுலை மாதத்திற்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

பரீட்சைத் திணைக்களத்தினால் பரீட்சைகள் நடைபெறும் திகதி, பரீட்சை நிலையம் போன்ற விபரங்கள் விரைவில் அறிவிக்கப்படும் என இந்துசமய கலாசார அமைச்சு விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## அவள் ஒரு மெழுகுவர்த்தி நூல் வெளியீட்டு விழா

(வடமராட்சி)

பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறை விரிவுரையாளர் பரா.ரதீஸின் 'அவள் ஒரு மெழுகுவர்த்தி' கவிதை நூல் வெளியீட்டு விழா பி.ப. 2 மணிக்குப் புற்றளை மகாவித்தியாலயத்தில் அகில இளங்கோ கழகத் தலைவர் முகுந்தன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த விழாவில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழகத் தமிழ்த்துறை வருகை விரிவுரையாளர் மு.முருகையன் சிறப்பு விருந்தினராகவும், பருத்தித்துறைப் பிரதேச செயலர் ஆ.சிவசுவாமி மற்றும் புற்றளை மகாவித்தியாலய அதிபர் ச.இந்திரராசா ஆகியோர் கலந்துகொள்ளவுள்னர்.

நூல் ஆய்வுரையைக் கவிஞர் சோ.பத்மநாதன் நிகழ்த்துவார். (17)

## திருத்தப்படாத வீதி மக்கள் விசனம்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் - நாயன்மார் வீதி 15 வருடங்களுக்கு மேலாகத் திருத்தப்படாமல் உள்ளதால், அவ்வீதியால் 'போக்குவரத்துச் செய்யும் மக்கள் - பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

கச்சேரி - நல்லூர் வீதிக்கும், முத்திரைச் சந்திக்குமிடையில் காணப்படும் மேற்படி வீதி மிகவும் மோசமாகச் சேதமடைந்திருப்பதோடு, பல இடங்கள் குன்றும், குழியுமாகக் காணப்படுகிறது. (55)

வாழ்க வளமுடன்
இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்
நான்காவது அகவையில்



பெயர் : ந.ஜெயகரன்
முகவரி : 1ம் வட்டாரம், நெடுந்தீவு.

## சட்டவிரோத கருக்கலைப்பு இளம்பெண் பரிதாப மரணம்

சட்டவிரோதமாக கருக்கலைப்புச் செய்த இளம் பெண், பரிதாபகரமாக உயிரிழந்த சம்பவம் கடந்த சனிக்கிழமை இடம்பெற்றது. நல்லூரைச் சேர்ந்த 24 வயதான ஜெயந்தி என்பவரே உயிரிழந்தவராவார். இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது -

குறிப்பிட்ட மூன்றுமாத கர்ப்பிணியாக இருந்தபோது, இவரது கணவன் இவரை விட்டுப் பிரிந்து சென்றார். இதனால், அவர் கருச்சிதைவு செய்வதற்காக ஆயுர்வேத மருத்துவர் ஒருவரை நாடினார்.

ஆயுர்வேத வைத்தியரிடம் கருச்சிதைவு செய்துகொண்ட ஜெயந்தி உடல் நிலை ஆபத்தான நிலையை அடைந்து யாழ். போதனா வைத்தியசாலை அவசர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்தார். சிகிச்சை பலனளிக்காத நிலையில், இவர் நேற்றுமுன்தினம் உயிரிழந்தார் எனப் பொலிஸார் தெரிவித்தனர். இந்தச் சம்பவம் தொடர்பாக தொடர்ந்தும் பொலிஸார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். (தீ)

# நேருக்கு நேர் மோதலாம்



ஷேன்வோண் - சும்மா ஒரு தமாஸ்



அர்ஜுன
கிண்ணம்பறித்தது மறந்திருச்சா

வார்த்தையாடல்கள் பலவகை. அதில் ஒருவகை சுவைமிகுந்தவை. ஷேன்வோண் டெஸ்ட் ஆட்டங்களில் கலந்துகொள்ள இலங்கை வருவது என்றதுமே, அவருக்கு ஒரு குஷி பிறந்துவிட்டது. அதுவும் ஒரு வருடத்தடையின் பின் அல்லவா சர்வதேசக் கிரிக்கெட் உலகினுள் நுழைகிறார். இப்படி மகிழ்ச்சியாக இருந்த ஷேன் வோணைச் சாதுவாகச் சீண்டிப் பார்த்தார் அர்ஜுன ரணதுங்க. தனது தலைமையின்கீழிருந்த இலங்கை அணி - ஷேன்வோணின் சுழல் பந்துவீச்சுக்கு அவ்வளவு பயப்பட்டதாக இல்லையென்று ஒரு பவுண்சர் போட்டுவிட்டார். விடுவரா ஷேன் வோண். பதிலடியாக அர்ஜுன என்ன செம்மறியாட்டை முழுமையாக விழுங்கியவர்போல இருக்கிறார். தற்போது அவரது நிறை 300 றாத்தலுக்கு மேல் இருக்குமா? என்கிறார் நக்கலாக. இருந்தாலும் அவர் ஒரு சிறந்த எதிரணிதான் என்கிறார். ஆனால், விடயம் இத்துடன் முடியவில்லை.

அர்ஜுன தொடர்கிறார் - நான் ஆட்டை விழுங்குவதோ, மாட்டை விழுங்கிவதோ, அதனால் குண்டாக இருப்பதோ அவருக்குத் தேவையில்லாத விடயம். ஆனால், நான் வில்லைகளைப் பாவித்துவிட்டு அம்மாவைச் சாட்டுவதில்லை. நான் 95 கிலோ நிறையுடன் அளவாகவே இருக்கிறேன். அவர் விழுங்கியதைப்போல் விழுங்காமல், ஆட்டை விழுங்குவது அப்படியொன்றும் குறறமில்லை என்பவர், அவரைச் சந்திக்கப் போகிறேன். சந்தித்தது எனது தேர்தல் பரப்புரைக் கூட்டங்களுக்கு அவரையும் அழைக்கப்போகிறேன். அவர் வந்தால் எனக்கு விழும் வாக்குகளுக்கு ஆபத்தென்று எனக்குத் தெரியும். இருந்தாலும், அவரையும் அழைத்துக் கொண்டுதான் போகவேண்டும் என்கிறார் சாகசமாக. எது எப்படியென்றாலும் அவரை நான் மதிக்கிறேன். அவர் மகத்தானதொரு கிரிக்கெட் வீரர் என்று முடிக்கிறார்.

- காயத்திரி -



# விளையாட்டு அரங்கம்

## போட்டியிலிருந்து விலகுவீரா?



முரளி - பட்டது போதுமப்பா

அண்மையில் முரளிதரன் ஒரு தடாலடி அறிக்கை விட்டிருந்தார். எதிர்வரும் ஜூன் மாதமளவில் அவுஸ்ரேலியா செல்லவிருக்கும் இலங்கை அணியில், தான் இணைய முடியாதிருக்குமென்றும், இதற்கான காரணம் அவுஸ்ரேலிய ரசிகர்கள் தன்மீது பொழியும் வசைமாரிகள் தன்னால் தாங்கமுடியாதளவிற்குப் போய்விட்டது என்றும் கூறியிருக்கிறார்.

இனி கிளைன் மக்ரா என்ன சொல்கிறார் என்று பார்ப்போம். முரளியைப்போல ஒருவர் இப்படிச் சொல்வது வெறும் அசட்டுத்தனம் என்கிறார். முரளி இப்படி ஒரு கருத்தை மனதாரத்தான் சொல்கிறார் என்று நான் நினைக்கவில்லை. முரளிக்குச் சில விடயங்கள் அவுஸ்ரேலியாவில் நடப்பது உண்மைதான். ஆனால், அவுஸ்ரேலிய அணி இப்படிப் பயணங்களை மேற்கொள்ளும்போது - இங்கிலாந்தில், நியூசிலாந்தில், தென்னாபிரிக்காவில், உபகண்டத்தில் எவ்வளவு கஷ்டங்களைச் சந்திக்கிறோம் தெரியுமா என்று கேட்கிறார். முரளியுடன் பல தடவைகள் நான் உரையாடியிருக்கிறேன். புன்முறுவல் பூத்தபடி சந்தோஷமான மனிதர் அவர்.



மக்ரா - இதுக்கெல்லாம் பயப்படலாமா

சர்வதேச வீரர்களுக்கு இப்படியாக அலுவல்கள் தவிர்க்கமுடியாதவை. இதனை முரளி பெரிதாக எடுத்துக் கொள்ளக்கூடாது. அதுவும் அணியின் நட்சத்திர ஆட்டங்கள் என்றால், சொல்லவே வேண்டாம். இலங்கையின் நட்சத்திரவீரர் இவர். அதுவும் உண்மையிலேயே சிறந்த வீரர். முரளி ஆதங்கப்படுத்துவதற்கோ அல்லது தன் தோள்மேல் சுமையை ஏற்றிக் கொண்டு, அவஸ்தைப்படவோ தேவையில்லை.

முரளி சர்வதேச விதிகளின்படியே அனுமதிக்கப்பட்ட முறையிலேயே பந்துவீசுகிறார் என்கிறார் மக்ரா. உண்மையாகவே முரளி இதன்பின் தன் முடிவை மீள்பரிசீலனை செய்யத்தான் வேண்டும். ஏனெனில், வார்த்தையிடலில் முதன்மையானவர் என்ற அவப்பெயர் அவுஸ்ரேலியாவின் கிளைன் மக்ராவிற்கே உண்டு. அவரே முரளியை எந்தளவிற்குத் தன் மனதில் உயர்த்திவைத்துள்ளார் என்பதற்கு இவரின் கருத்துக்கள் நல்ல உதாரணம். மேலும் முரளி இல்லாத இலங்கை அணி தற்போதைக்கு சாத்தியமில்லை என்ற நிலையில், முரளி எந்த விலைகொடுத்தும் அணிக்காகவே பேசவேண்டும். தனக்காக அல்ல.

- லிவிங்ஸ்ரன் -

## தேசியப் பட்டியலில் உள்ளே வருகிறார்

கிரிக்கெட் விமர்சகர் ஒருவர் இலங்கை - அவுஸ்ரேலிய டெஸ்ட் தொடர் பற்றிக் கூறுகையில், இலங்கை அணி எதைக் கொடுக்க முயற்சிக்கிறதோ, அதனையே அவுஸ்ரேலியா திருப்பிக்கொடுக்கத் தீர்மானித்துள்ளது. என்கிறார். இலங்கை அணியின் 'ஒண்ணே ஒண்ணு கண்ணே கண்ணு' என்றிருக்கும் முரளி எனும் ஆயுதத்துக்குப் பதில் ஷேன்வோண், மக்கில், பிரட்ஹொக் ஆகிய திரிசூலத்தை அவுஸ்ரேலியா பயன்படுத்தும் போலத் தெரிகிறது.

நடைபெறும் ஒருநாள் போட்டிகளில் பிரட் ஹொக்கின் அபாரப்பந்து வீச்சு அவுஸ்ரேலிய தேர்வாளர்களின் கருத்தில் இருகூர் வாளை, சூலமாக்கினால் என்ன என்ற சிந்தனைக்கு இட்டுச் சென்றுளளது.



பிரட்ஹொக்
பதினாறாவது மனிதன்

தெளிவான தலைவர் ட்ரெவர் ஹொான்ஸ் முதலிரண்டு டெஸ்ட் போட்டிகளுக்கும் நடைபெறவிருக்கும் காலி மற்றும் கண்டி தடங்கள் எந்தளவு உயிரற்றவை, உப் புச்சப்பற்றவை என்பதை நன்கு உணர்ந் தேயுள்ளார். அதனைத்தான் மூன்று சுழல் பந்துவீச்சாளர் அணியில் இருப்பதைப் பற்றிச் சிந்தித்துள்ளார்.

எனவே பதினைந்து பேருக்கு மேலாக பதினாறாவது வீரராக இலங்கையில் ஹொக் தங்கி நிற்க வேண்டுமாயின் அவுஸ்ரேலிய கிரிக்கெட் நிர்வாகம் 30,000 அவுஸ்ரேலிய டொலர்களைக் கூடுதலாகச் செலவழிக்க வேண்டியிருக்கும். இது ஹொக் பெறும் சமபளமாகவும் இருக்கும் அவுஸ்ரேலியா பாடு திண்டாட்டமாகத்தான் இருக்கப்போகிறது. அணித்தெரிவு என்ற வகையில் டரன் லீமனும் இலங்கை வரவிருக்கும் நிலையில் யாரைவிடுவது, யாரை எடுப்பது என்பது. அவர்களுக்குச் சிரமமானதாகவும். எங்களுக்கு சுவார்ஸ்சமான ஊகமானதாகவும்தான் இருக்கப்போகிறது. என்று புரிகிறது. டெஸ்ட் போட்டிகளில் இலங்கையை ஒரு கைபார்த்தே தீருவது என்று அவுஸ்ரேலியா தீர்மானித்து விட்டது. என்பதே அது.

-ஜோஸப் கிருஷ்ணா-

## வெற்றிக்கு இடது சாரிகள் உதவி!



ஜஸ்ரின் லாங்கர் - பசைபோல ஒட்டணும்

1999 ஆம் ஆண்டு இலங்கை வந்த அவுஸ்ரேலிய அணியிலிருந்த வீரர்களில் இன்று இருப்பவர்கள் இருவர். ஒருவர் ரிக்கி பொண்ரிங். மற்றவர் ஜஸ்ரின் லாங்கர் . ஜஸ்ரின் லாங்கர் - 1999 ஆம் ஆண்டில் அவ் வளவு சோபிக்கவில்லை. ஆனால், தற்போது பெரிதும் நம்பிக்கையுடையவராக இருக்கிறார். ஜஸ்ரிங் லாங்கர் கருத்துக்கூறும்போது- இடது கைத்துருப்பாட்ட வீரர்களுள் எப்போதும் முரளிக்கு எதிராகச் சிறப்பாகவே ஆடியிருக்கிறார்கள். 1999 இல் முதல் ஏழுபேரில் இவர் ஒருவர் மட்டுமே இடதுகைத் துடுப்பாட்டவீரர். இவர் துடுப்பாட்ட வரிசையில் மூன்றாவதாகக் களம் இறங்குகிறார். இவருடன் விளையாட்டில் மைக்கல் சிலேட்டர், கிரெக் பிளெவெட் மார்க்வோ, ஸ்ரீவ்வோ, ரிக்கிபொண்ரிங், இயன்ஹீலி அனைவருமே வலது கைத்துடுப்பாட்ட வீரர்கள். ஆனால், தற்போது நிலைமை அப்படியல்ல. ஜஸ்ரின் லாங்கர் - மேற்கிந்தியக் கிரிக்கெட்டில் மேற்கு அவுஸ்ரேலியாவிற்காக ஆரம்பத் துடுப்பாட்ட வீரனாக ஆயிரத்துக்கும் மேற்பட்ட ரண்களைக் குவித்துள்ளார். ஆனால், இன்று கங்காரு வரிசையைப் பார்ப்பவர்கள் - ஜஸ்ரின் லாங்கர், மத்தியூ ஹேடன், டரன் லீமன், சைமன் கட்டிச், அடம் கில்கிறிஸ்ட் எல்லோரும் இடது கைத்துடுப்பாட்ட வீரர்கள். டேமியன் மார்டின் மட்டுமே வலது கைத்துடுப்பாட்ட வீரர்.



டரன் லீமன் - கவுக்கிறேன் பாருங்க

முரளி உலகின் மிகச்சிறந்த சுழல் பந்து வீச்சாளர் என்பதைச் சுட்டிக்காட்டிய ஜஸ்ரின் லாங்கர் - முரளியை மையமாக வைத்து, தம் அணியின் வெற்றிக்கான சாதகநிலையை அலசியிருக்கிறார்.

நான் முரளியை எதிர் கொள்வதற்கென்றே சிறந்த பயிற்சிகளைப் பெற்றிருக்கிறேன். இப்போதுள்ள எனது தாகம் - எப்போது இலங்கைக்குப் போவேன் என்பதுதான்.

மேற்கிந்திய அணித்தலைவர் பிறைன் லாறா, நியூசிலாந்து அணித்தலைவர் - ஸ்ரீபன் பிளெமிங் இவர்களெல்லாம் முரளிக்கெதிராக நன்றாகவே செய்துள்ளார்கள். எனவே எனக்கு இதெல்லாம் வாய்ப்பா, இல்லையா என்பதைப் பொறுத்திருந்து பார்ப்போம் என்கிறார் ஜஸ்ரின் லாங்கர் பத்திரிகையாளர் பாணியில்.

Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports

வாஸ்



"சைமன்ஸ் உணர்ச்சிவசப்பட்டுட்டார்"

# மீள் நியமனம் பெற்றும் பயனில்லை

எதிர்பாராமல் என்னவோ எல்லாம் நடக்கும் என்றால் அது கிரிக்கெட் ஆட்டத்தில்தான். அதுவும் ஒரு நாள் ஆட்டம் தான் என்றால் சொல்லவே வேணடாம். அப்படியான எல்லையில் சம்பவங்கள் நடைபெறும். முடிவடைந்த இரண்டாவது இலங்கை - அவுஸ்ரேலிய அணிகளுக்கிடையிலான போட்டியில் இவற்றுக்கு உதாரணங்கள் அதிகம். ஒன்று 121 என்ற எண்ணிக்கையில் முதலாவது விக்கெட்டை இழந்த இலங்கை 245 இற்கு முழு விக்கெட்டையும் இழந்தமை, இதிலும் ஜிலெஸ்பி, பிரட்லீ இருவரும் ஒரு விக்கெட்டும் எடுக்காமை, அதையடுத்து, மைக்கல் கிளார்க் ஐந்து விக்கெட்டுக்களைச் சரித்தமை, தொடர்ந்து வெற்றி நிச்சயம் என்று (கிரிக்கெட் ரசிகர்கள் அனைவரும் தான்) அவுஸ்ரேலியா ஆடத் தொடங்கியமை, திடீரென்று நடுவர் பீற்றர் மனுவல், அன்ரூ சைமன்ஸ் LBW முறையில் அவுட் என்று பிழையாகத் தீர்ப்பளித்தது. உடனே பிழையை உணர்ந்து முடிவை மாற்றி அத்தப்பத்திடம் விடயத்தைக் கூறி அன்ரூசைமன்சை மீள அழைக்கலாமா என்று வினாவியது. இலங்கை அணித்தலைவர் மாவன் அத்தப்பத்து மிகக் கண்ணியமாக அதற்கு இணங்கியது. திடீரென்று சமிந்த வாஸ் தனது அதிதிறமையான பந்து வீச்சினால் அவுஸ்ரேலிய அணியின் சுருக்குக் கயிற்றை இறுக்கியமை, தொடர்ந்தும் சமிந்த வாஸ் இறுதி ஓவரில் எட்டு ரன்கள்மட்டும் எடுத்தால், காணும் என்ற நிலையில் களத்தில் நின்ற ஓட்டக் கொள்ளைக்காரர்கள் அன்ரூ சைமன்ஸ், மைக்கல் பெவன் இருவரின் கரங்களுக்கும் விலங்கு போட்டு அதி அற்புதமாக அந்த ஒன்று அல்லது இரண்டு ஓட்டங்களைத் தட்டிப் பறித்தது, இப்படியே அடுக்கிக் கொண்டே போகலாம்.

சமிந்த வாஸ் கருத்துக்கூறும்போது, நான் விளையாடிய ஒருநாள் போட்டிகளில் இதுவே முதன்மையானது என்கிறார். இது ஒருபுறம் இருக்க சுவாரஸ்யம் இல்லாத வழமையான சில சம்பவங்களும் நடைபெற்றன. அன்ரூ சைமன்ஸ் பந்து கால் தடுப்பில் படுமுன் துடுப்பில் பட்டது என்று துடுப்பை நடுவர் நோக்கி நீட்டிக்காட்டியது, கில்கிறிஸ்ட்கோபத்தால் கையுறைகளைக் கழற்றி எறிந்தமை, ஆட்டம் முடிந்தபின் ரிக்கி பொண்டிங் தோல்வியின் கோபத்தை நக்கலாகப் பத்திரிகையாளருக்குத் தெரிந்தமை... இப்படியே போகிறது. எப்படிப் போனாலும் இலங்கையின் அருமையான வெற்றிக்கு சபாஷ் போட்டே ஆக வேண்டும்.

- காவேரி கிருஷ்ணா -

# வோல்ஷை துரத்துகிறார்கள்

உலகின் இரண்டு முதன்மை சுழல்பந்து வீச்சாளர்களுக் கிடையில் கடும்போட்டி நிலவுகின்றது இந்தப் போட்டி ஒருநாள் போட்டிகளில் யார் முதலில் இரட்டைச் சதத்தைப் பெறுவது என்பதற்கா கவோ அல்லது ஒரு நாள் போட்டிகளில் யார் 400 ஓட்டங்களை பெறுவது என்பதற்காகவோ அல்ல.

மாறாக இம்முறை இந்தக் கடும்போட்டியில் முதலில் 500 விக்கெட்டுக்களை கைப்பற்றுவது குறித்து அமைந்துள்ளது. ஷேன்வோர்னும், முத்தையா முரளிதரனும் இதற்காகப் போட்டி போடுகிறார்கள். டெஸ்ட் போட்டிகளில் 519 விக்கெட்டுக்களைக் கைப்பற்றிய கொட்னி வோல்ஷின் உலக சாதனையே இவர்களின் இறுதி இலக்கு என்கின்ற போதிலும் தற்போதைக்கு யார் 500 விக்கெட்டுக்களைக் கைப்பற்றுவது என்பதிலேயே கடும்போட்டி நிலவுகிறது.

மார்ச் மாதம் ஆரம்பமாகும் மூன்று டெஸ்ட்களைக் கொண்ட தொடரில் 8 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினால் ஷேன்வோன் 500 விக்கெட்டுக்களைக் கடந்துவிடுவார். முரளி 15 விக்கெட்டுக்களை கைப்பற்றவேண்டும். ஷேன்வோனே முதலில் சாதனையை முறியடிப்பார் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

இருவரும் வித்தியாசமானவர்கள் ஒருவர் லெக்ஸ்பின்னர் மற்றவர் ஓவ்ஸ்பின்னர் ஒருவர் அதிகமாகத் தன்னை வெளிப்படுத்திக் கொள்பவர் மற்றவர் தனிமையை விரும்புபவர். இருவரும் தப்பிப் பிழைத்தவர்கள் இருவரும் கடும்போட்டிக்கு மத்தியிலேயே முன்னணிக்கு வந்தவர்கள். ஷேன்வோன் சந்தித்த பல பிரச்சினைகள் அவரே உருவாக்கிக்கொண்டவை. மாறாக முரளிதரனுக்குப் பிரச்சினையே அவரது பந்துவீச்சு முறையிலிருந்து வந்தது.

முரளிதரன் சிலரால் பலிக்கடா வாக்கப்பட்டவர் என்ற கருத்தும் நிலவுகிறது. இவரது பெயர் இழுபடாமல் ஒரு கிரிக்கெட் சீசன் கூட வந்ததில்லை. அவுஸ்ரேலியாவில் முரளி சந்தித்த அவமானங்கள் சொல்லிமாளாது. இதன் காரணமாக அவர் இம்முறை அவுஸ்ரேலியாவுக்குச் செல்லமாட்டார் என சொல்லப்படுகிறது. இவை யாவற்றின் காரணமாக ஷேன்வோனின் மீள் வருகை பலத்த உணர்வுப் போராட்டத்திற்கு வழிவகுத்துள்ளது.

இவற்றுக்கப்பால் இரு அற்புதமான சுழல்பந்து வீச்சாளர்களும் கிரிக்கெட் ரசிகர்களை பல முறை பரவசப்படுத்தியுள்ளனர்.

- நன்றி மெற்றோ -

# வேட்பு மனு நிராகரிக்கப்படலாம்

மார்ச் மாதத்தில் இந்தியக் கிரிக்கெட் அணி - பாகிஸ்தான் செல்கிறது. அடுத்து பாகிஸ்தான் அணியின் பயிற்றுநர் ஜவாட் மியன்டாட், இரண்டுமே சூடான விடயங்கள்தான். மியன்டாட் ஓவராகப் பேசவில்லை. ஆனால், சூடாகப் பேசுகிறார். பாகிஸ்தான் தேசிய அணியில் இடம்பெறக் கூடியவர்களின் முகாமொன்றில் கருத்துரையாற்றிய மியன்டாட் இருநூறு வீதம் தகுதியை நிரூபிக்காத எந்த வீரரும் அணிக்குள் சேர்த்துக் கொள்ளப்படமாட்டார்கள் என்கிறார் கறாராக.



மியன்டாட் - நெஞ்சம் மறக்குமா

வீரர்கள் விஷேடமாகக் கவனம் செலுத்தவேண்டிய துறைகள் இரண்டு உண்டு என்றுகூறும் அவர், அவை பந்துவீச்சும், களத்தடுப்பும் என்கிறார்.

தமது பந்துத் தடுப்பு ஆற்றலை வளர்த்துக்கொள்ள, தனித்தனியாக ஒவ்வொரு வீரரும் மிகவும் கடும் பயிற்சிகளை மேற்கொள்ளவேண்டும். பந்து வீச்சாளர்கள் நோபோல், வைற் போல் போன்றவற்றை மிகமிகக் குறைத்துக்கொண்டு, பந்துவீசப் பழகிக்கொள்ளவேண்டும்.

ஐம்பது ரன்களைச் சேகரிக்கும் வீரர் ஒருவர் ஐம்பது ரன்கள் இழக்கக் காரணமாக இருப்பாரேயானால் அவர் பிரயோசனமற்றவர் என்பவர் சராசரி ஓட்டம் எடுப்பதுடன், பிரமாதமாக் களத்தடுப்பு செய்யும் ஒருவர் அணிக்கு மிகுந்த பிரயோசனம் உடையவர் என்கிறார். களத்தடுப்புப் பயிற்சிக்கு வெளியில் யாரும் தேவையில்லை. நான் இந்த விடயத்தில் கூடுதல் அக்கறை கொண்டுள்ளேன். அத்தோடு, கிரிக்கெட் வீரர்கள் மிகக் கடுமையான பயிற்சிகளுக்கு முகம் கொடுக்கத் தயாராக இருக்கவேண்டும். கிரிக்கெட் என்பது கனவிலும் நினைக்கப்படவேண்டியதொன்றாகும். அப்படி இல்லாதவர்கள் சரியான வீரர்களாக வளரமுடியாது. அவர்கள் அணியில் இடம் பெறவும் முடியாது என்கிறார் மியன்டாட். ஒரு குறிப்புக்காலம் ஞாபகத்தில் இல்லை. கடைசிப்பந்து நான்கு ஆட்டத்தில் வெற்றிப்பந்தைக் கையில் வைத்திருப்பவர் இந்திய வேகப் பந்துவீச்சாளர் சேத்தன் ஷர்மா. முகங்கொடுப்பவர் ஜாவிடமியன்டாட் சேத்தன் ஷர்மாவின் கையை விட்டுப் புறப்படுகிறது பந்து. தன்னை நிதானித்த மியன்டாட் லாவகமாக அடித்த அடி பந்தை எல்லைக் கோட்டுக்கு மேலால் பறந்து ஆறாகிறது. இந்தியா தோற்கிறது. பாகிஸ்தான் வெல்கிறது. இன்றும் மியன்டாட் களத்தில்தான் நிற்கின்றார். ஆக்ரோஷம் குறையாமல் தொடர் அந்த மாதிரி இருக்கப்போகிறது.

- காவேரி கிருஷ்ணா-


# ஜொனெக்ஸ் விளையாட்டுப் புதிர்

1. மூன்றாவது தமிழீழப் பெரு விளையாட்டுவிழா எந்த நகரத்தில் நடந்துமுடிந்துள்ளது?
2. அண்மையில் ஓய்வுபெற்ற அவுஸ்திரேலிய டெஸ்ட் அணித் தலைவர் யார்?
3. ஒலிம்பிக் போட்டிகள் இந்த ஆண்டில் எந்த நாட்டில் நடைபெறவுள்ளது?

விளையாட்டுப் புதிர் - இல 1

விண்ணப்பப் பத்திரம்

முழுப்பெயர் :-

முகவரி :-

1.

2.

3.

விடைகள் எழுதப்பட்ட இவ்விண்ணப்பப் படிவத்தினை தந்து பின்வரும் முகவரிக்கு எதிர்வரும் வியாழக்கிழமைக்கு (4.3.2004) முன்னதாக அனுப்பி வையுங்கள்

விலாசம் :- விளையாட்டுப் புதிர் - இல 1
நமது ஈழநாடு
267 - நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

அனுசரணை :- ஜொனெக்ஸ் மல்ரி பலஸ்
YONEX MULTI PALACE
76 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். T.P. 021-2227648, 0777 166894


# மூவலாக்கச் வெற்றிதரும்

1968 ஆம் ஆண்டு இங்கிலாந்து அணித்தலைவர் கொலின் கவுட்ரி தலைமையில் மேற்கிந்தியத் தீவுகளுக்குச்சென்ற இங்கிலாந்து டெஸ்ட் தொடரை வென்றதன் பின் அந்த மண்ணில் தொடர் பொன்றை வெல்வது இங்கிலாந்துக்குக் கனவாகவே இருக்கிறது. இப்போது மீண்டும் ஒருமுறை கரிபியன் கடற்கரையில் தரை இறங்கியிருக்கிறார்கள். இங்கிலாந்து அணியினர், இது பற்றிய எண்ணங்களை வெளிப்படுத்துகிறார் - இங்கிலாந்து அணித்தலைவர் மைக்கல்வோண்.

தற்போது எனது அணியிலுள்ள எவரும் அன்று தொடரை வென்றபோது, பிரிந்திருக்கவில்லை ஆனால், இம்முறை அந்த இலக்குடன் செல்வது சுவாரஸ் சமானது தான் அவர்கள் தற்போதுதான் தென் ஆபிரிக்காவிடம் 3-0 என்று தோற்றுள்ளார்கள் ஆனால், அவர்களின் சொந்த மண்ணில் அவர்களை வீழ்த்த முனைவது இலகுவானதாக இருக்காது. சிறப் பாகப் பிறைன் லாறாவின் வீச்சு அதீதமானது. அவர் துடுப்பாட்டத்தில் இங்கிலாந்துக்கெதிரான கரிபியன் மண்ணில் சராசரி ஏறத்தாழ 75 என்றநிலையில் இருக்கின்றார். எனவே இந்த ஆபத்தை மனதிற்கொள்ள வேண்டும். இதற்கான திட்டங்களை நாம் வகுத்துக்கொள்ள வேண்டி யிருக்கிறது.



அவர் மேலும் கூறுகிறார் - எமது அணி பலமான துடுப்பாட்ட வரிசையைக் கொண்டிருப்பது உண்மைதான். ஆனால், பலவீனமான பந்துவீச்சு வரிசையையே கொண்டிருக்கிறோம். அதாவது, ஜேம்ஸ் அண்டர்சன், ஸ்ரீபன்ஹேர்மிசன், சைமன் ஜோன்ஸ் ஆகியவர்கள் உபாதையிலிருந்து மீண்டுள்ள இளம் வேகப் பந்து வீச்சாளர்கள்தான். ஆனாலும், இவர்கள் 90 மைல்கள் வேகத்தில் பந்து வீசுவது நம்பிக்கை தருகிறது. என்கிறார்.

அத்தோடு, ஸ்தாபிதம் பெற்றுள்ள ஒரு சகலதுறை வீரரான அன்ரூ, பிளின் ரோவின் சுமையையும் மேற்கண்ட மூன்று பந்து வீச்சாளர்களும் தம் திறமையை வெளிப்படுத்திக் குறைக்க முயலவேண்டும். என்றும் மைக்கல் வோண் எதிர்பார்க்கிறார்.

-மக்டலின்-

மைக்கல்வோண் - சாதனை புரிய ஆசை

Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports

தெற்குத் திசையினிலே... - கொழும்பிலிருந்து இந்திரஜித் -


# அரசியல் யதார்த்தத்தை புரிந்துகொண்டு தீர்மானம் எடுக்க வேண்டிய காலகட்டம்

தேர்தல் பிரசாரங்கள் உத்தியோகபூர்வமாக ஆரம்பிக்கப்பட்டுள்ளன. மக்கள் தற்போதுதான் அரசியல்வாதிகளால் மனிதர்களாகப் பார்க்கப்படுகின்றனர். உறுதிமொழிகள் உத்தரவாதங்கள், வாக்குறுதிகள், நன்கொடைகள், புதிய பல திட்டங்கள் மக்களுக்கு வழங்கப்படுகின்றன. மக்களால், மக்களுக்காக மக்களே ஆளும் ஆட்சியே மக்கள் ஆட்சி என்ற பெயருக்கு தற்போது அர்த்தம் கிடைத்துள்ளது. மக்களுக்காகத் தாம் என்ன செய்யப்போகிறோம் என அரசியல்வாதிகள் கூறுபவையாவும் சிலவேளைகளில் யதார்த்தமாகலாம். ஆனால், பெரும்பாலும் அவை யதார்தத்திற்கு அப்பாற்பட்டவையே. பிரதான கட்சிகளான ஐக்கிய தேசிய கட்சியும், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியும் தமது தேர்தல் பிரசாரக்கூட்டத்தில் பல்வேறு உறுதிமொழிகளை வழங்கத்தவறவில்லை. ஜனாதிபதி சுமார் 60 ஆயிரம் பேருக்கு வேலைவாய்ப்புக்கள் வழங்கப்படும் என்றும், ஆனால், அதற்காகத் தமது முன்னணி ஆட்சியில் இருத்தப்படவேண்டும் என நிபந்தனையை விதித்தார். பிரதம மந்திரியைப் பொறுத்தவரையில், தாம் 3 இலட்சம் வேலையற்றவர்களுக்கு பல புதிய திட்டங்களை முன்வைத்திருப்பதாகக் கூறினார். ஆனால் சந்திரிகாவும், ரணிலும் கூறியவை உறுதிமொழிகள் மாத்திரமே என்பதை மக்களால் இன்னும் சரியாகப் புரிந்துகொள்ளமுடியவில்லை. ஏனெனில், கட்சி ஆதரவாளர்கள் எனச் சொல்லக்கூடியவர்கள், சிலவேளைகளில் தாமே கட்சியாக மாறிவிடுவார்கள். அவ்வாறான ஒரு நிகழ்வே தேர்தல் பிரசார முதல் கூட்டமாகும்.

> **இலங்கையின் பொதுத்தேர்தலுக்கு இன்னும் சரியாக 30 நாட்களே எஞ்சியுள்ளன. இந்த 30 நாட்களும் - அரசியல்வாதிகளை பொறுத்தவரையில் 5 வருடங்களுக்கான முதலீட்டு நாட்களாகும். மக்களைப் பொறுத்தவரையில் இந்த 30 நாட்களும் அரசியல்வாதிகளுக்கான 5 வருடத் தொடர்பில் தீர்மானமெடுக்கவேண்டிய நாட்களாகும். பிழையான அரசியல்வாதிகள் தமது நோக்கில் வெற்றிபெற்று, மக்கள் தோற்றுப்போனால் நாடு மேலும் சீரழிந்து போகும். மறுபுறத்தில் மக்கள் சரியான தீர்மானத்தை எடுத்தால், அது நாட்டை சீரமைப்பதற்கான அத்திவாரத்தை ஏற்படுத்தும்.**

இந்தக் கூட்டங்களில் கலந்துகொண்டோர் உண்மையில் ஏதோ ஒரு எதிர்பார்ப்புடனேயே கலந்துகொண்டனர். இந்த மக்களின் எதிர்பார்ப்புக்களைத் தமது பேச்சின் மூலம் வென்றெடுக்கக்கூடிய வல்லமையை ஜனாதிபதியும், பிரதம மந்திரியும் நன்றாகவே அறிந்துவைத்திருந்தனர். அநுராதபுரத்தில் உரையாற்றிய ஜனாதிபதி - தமது முன்னணி ஆட்சிக்கு வந்தால், தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடத்தப்படும் எனத் தெரிவித்தார். ஆனால், பல்வேறு தரப்பினரதும் ஆலோசனையைத் தாம் இனப்பிரச்சினை தீர்வுக்குப் பெற்றுக்கொள்வதற்காக அவர்களுடன் சமகாலத்தில் பேச்சுநடாத்தப்படும் என ஜனாதிபதி கூறினார். இங்குதான் யதார்த்ததிற்கு அப்பாற்பட்ட விடயங்கள் வெளிப்படுகின்றன. தமிழீழ விடுதலைப் புலிகளைப் பொறுத்தவரையில், தமிழ் மக்களின் ஏகபிரதிநிதிகள் என்ற நிலைப்பாடு தற்சமயம் சர்வதேச மட்டத்தில் கொண்டு செல்லப்பட்டுள்ளது. ஐக்கிய தேசிய கட்சியும் அதன் அடிப்படையிலேயே தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தையை ஆரம்பித்தது. ஏன் அனுபவ வாயிலாக பார்த்தால் ஜனாதிபதியும், தாம் 1991 ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்தவேளையில் இனப்பிரச்சினையில் சம்பந்தப்பட்ட அனைத்து தரப்போடும் பேச வேண்டும் என முயற்சிக்கவில்லை. தமிழீழ விடுதலைப் புலிகளுடனேயே பேச்சுவார்த்தையை ஆரம்பித்தார். அதுவும் அவர்களுக்கு வடக்கு - கிழக்கில் 10 வருடத்திற்கு ஆட்சியமைத்து தருவதாகக்கூட ஜனாதிபதியினால் யோசனை முன்வைக்கப்பட்டது. அவ்வாறான ஜனாதிபதி, இன்று இனப்பிரச்சினைத் தீர்வுக்கு அனைத்து தரப்புடனும் பேச்சு நடத்தப்படவேண்டும் எனக் கூறுவது யதார்த்தமாகாது. இது, ஜனாதிபதியின் முற்றுமுழுதான கருத்தாக இருக்க வாய்ப்பில்லை. தற்சமயம் அவர் மக்கள் விடுதலை முன்னணியுடன் இணைந்திருப்பதால், அவர்களையும் திருப்திப்படுத்த வேண்டிய கட்டாயம் எழுந்திருக்கிறது. எனவேதான் ஜனாதிபதி, தமது வாக்காளர்களைத் திருப்திப்படுத்தும் நோக்கில், அவர்களின் ஒட்டுமொத்த வாக்கினைப் பெறும் நோக்கில் கருத்துக்களை வெளியிட்டு வருகிறார். ஒன்றை எடுத்துக்கொள்ளத்தான் வேண்டும். ஐக்கிய தேசியக் கட்சியைவிட







பொதுஜன ஐக்கிய முன்னணியே அதாவது, ஜனாதிபதியே முதன்முதலாக இனப்பிரச்சினைக்கான தீர்வை முன்வைத்தார். ஐக்கிய தேசிய கட்சியைப் பொறுத்தவரையில் அந்தக் கட்சி இன்னும் தீர்வு எதனையும் முன்வைக்கவில்லை என ஜனாதிபதி கூறும் குற்றச்சாட்டு ஏற்றுக்கொள்ளக் கூடியதே. அதற்காக யதார்த்தமில்லாத ஒரு கொள்கையை மீண்டும் மீண்டும் கூறிக் கொண்டிருப்பது நிலைமையை மேலும் சிக்கலாக்கும் என்பது இங்கு குறிப்பிடவேண்டிய அம்சமாகும்.

மறுபுறத்தில், ஐக்கிய தேசிய கட்சி அதன் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துவரும் கருத்துக்கள், யதார்த்தமானதாக இருந்தாலும், அதனை அவர் நடைமுறைப்படுத்துவதில் சிக்கல்களை எதிர்நோக்குகிறார் என்பது தெளிவு. இதற்காகச் சிலவேளைகளில் அவர், தமது கருத்துக்களைக்கூட கட்டுப்படுத்திக் கொண்டு செயற்படும் சந்தர்ப்பங்களைச் சுட்டிக்காட்டலாம். ஐக்கிய தேசிய கட்சியின் முதலாவது பிரசாரக்கூட்டம் கண்டியில் நடைபெற்றபோது, அதில் உரையாற்றிய பிரதமமந்திரி - தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பேச்சுக்கள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படும் எனக் குறிப்பிட்டார். இடைக்கால நிர்வாகத்தைத் தமது அரசாங்கம் ஏற்றுக்கொள்வதாக அவர் கூறியபோதும், எவ்வாறான இடைக்கால நிர்வாகத்தை ஏற்றுக்கொள்கிறார் என்பதை அவர் வெளிப்படுத்தவில்லை. இது அவருக்கு தென்னிலங்கையில் உள்ள எதிர்ப்புக்களை முன்னுணர்த்துகிறது. அத்துடன், இது தேர்தல்காலமாகையால், எந்த ஒரு யதார்த்த கருத்துக்களையும் வெளிப்படுத்தமுடியாது. அவ்வாறு வெளிப்படுத்தினால், தனக்கு தென்னிலங்கையின் வாக்குகள் குறைந்துவிடும் என்ற அச்சமும் பிரதமரைச் சூழ்ந்திருப்பது நன்றாகவே புரிகிறது. ஜனாதிபதி-பிரதமர் தொடர்பாக எதனைக் கூறினாலும், கடந்த 2 வருடகாலமாகப் பிரதமரும், தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனும் செய்துகொண்ட ஒப்பந்தம், போர்நிறுத்த ஒப்பந்தமாக சிறு சிறு மீறல்களுக்கு மத்தியில், தொடர்ந்தும் கடைபிடிக்கப்பட்டு வருவதை அவர் ஏற்றுக்கொள்ளவேண்டும். ஜனாதிபதி 1994 ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்ததும் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் இணங்கிக்கொண்ட போர்நிறுத்தம் முறிவடைந்தமைக்கு விடுதலைப் புலிகளையே குற்றம் சுமத்திவந்தார்.

ஆனால், அவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்காகத் தாம் இலங்கை வங்கித் தலைவரை அனுப்பியமையை ஜனாதிபதியால் என்றுமே நியாயப்படுத்தமுடியாது. 20 வருடகாலமாகப் பல்லாயிரக்கணக்கான உயிர்களைக் காவுகொண்ட யுத்தத்திற்கு பரிகாரம் காணுவதற்காக, அதிகாரம் இல்லாத அதுவும் அரசாங்க ஊழியர்களை தமிழீழ விடுதலைப்புலிகளுடன் பேச்சுக்கு அனுப்பியதை எவராலும் ஏற்றுக்கொள்ள முடியாது. இது ஒரு காய்நகர்த்தலாகவே ஜனாதிபதியினால் மேற்கொள்ளப்படுவதாகத் தமிழீழ விடுதலைப் புலிகள் எண்ணினர். மறுபுறத்தில் அரசபடையினருக்கு ஆட்பலம், ஆயுதபலங்களும் அதிகரிக்கப்பட்டுக்கொண்டிருந்தது. இவ்வாறான சூழ்நிலையில், போர் நிறுத்தம் ஒன்று எவ்வாறு கடைப்பிடிக்கப்பட முடியுமென்பதை சாதாரண மக்களாலும் விளங்கிக்கொள்ளமுடியும்.

தற்சமயம் தேர்தல் காலமாகையால், மறுக்கப்பட்டாலும்கூட நிறைவேற்றப்பட வேண்டிய விடயம் ஒன்று மட்டுமே இருக்கிறது அது என்ன? இலங்கை இனப்பிரச்சினையைத் தீர்க்கவேண்டும் என்பதற்காக, இன்றுவரை ஐக்கிய தேசியக்கட்சியும், பொதுஜன ஐக்கிய முன்னணியும் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தைகளை நடத்தியுள்ளனர். அதன்மூலம் தமிழீழ விடுதலைப் புலிகளின் எண்ணங்களை, கோரிக்கைகளை அவர்கள் பெற்றுள்ளனர். இறுதியாகத் தமது ஆரம்பகட்ட எண்ணங்கள், கோரிக்கைகள் அனைத்தையுமே தமிழீழ விடுதலைப் புலிகள் வடக்கு - கிழக்கு இடைக்கால நிர்வாக அலகு யோசனையை இலங்கைப் அரசாங்கத்திறகு மட்டுமல்லாமல், தென்னிலங்கை சிங்கள மக்களுக்கும் தெரிவித்துவிட்டனர். எனவே இப்போது நிறைவேற்றப்படவேண்டியதெல்லாம் தமிழீழ விடுதலைப் புலிகளின் இடைக்கால யோசனையை ஏற்றுக்கொள்வதா? இல்லையா? என்பது மட்டுமே. அல்லது அது தொடர்பாகப் பேச்சுவார்த்தை நடாத்தும் மற்றுமொரு வழியாகும். இதனைவிடுத்து மீண்டும் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் ஆரம்பித்திலிருந்து பேச்சு நடத்தப்போகிறோம் என ஜனாதிபதியும், அவருடன் இணைந்துள்ள மக்கள் விடுதலை முன்னணியும் கூறுவது - மீண்டும் ஆணை கிடைத்தால் விட்ட இடத்திலிருந்து பேச்சுக்களை ஆரம்பித்து, தென்னிலங்கையில் தனது ஆட்சியை தக்கவைத்துக்கொள்வதற்கும், வெளிநாட்டு உதவிகளைப் பெறுவதற்கு மட்டுமே பிரதமமந்திரி நோக்காகக் கொண்டிருப்பதும் நடைமுறைச்சாத்தியமில்லாது விடயங்களாகும். எனவே இலங்கையின் அரசியல் தலைவர்கள் சாத்தியமான நடவடிக்கைகளைத் துணிவுடன் முன்னெடுக்கவேண்டிய கட்டாயத்துக்குள்ளாகியுள்ளனர். இந்த கட்டாயத்துக்கு அவர்கள் உடன்படாவிட்டால், வெளிநாடுகள் நேரடியாகத் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு வடக்கு - கிழக்கைப் புனரமைப்புதற்கு நிதியுதவிகளை வழங்குவதை எவராலும் தடுக்கமுடியாது போய்விடும். இதில் அமெரிக்ககூட விதிவிலக்காக இருக்கப்போவதில்லை. ஏனெனில், தமிழீழ விடுதலைப் புலிகள் தொடர்பில் நேரடியான குற்றச்சாட்டுக்கள் இல்லாதபோது, இலங்கையில் தமது நலன்களைப் பெற்றுக்கொள்வதற்கு மட்டுமே இன்று தமது நாட்டில் தமிழீழ விடுதலைப் புலிகளை அமெரிக்கா தடை செய்திருப்பது அனைவருக்கும் தெரிந்த விடயம்.

தற்சமயம் அந்த நாட்டினால் தமிழீழ விடுதலைப் புலிகளைக் குற்றம் கூறுவதற்கும்கூட வழியில்லாத நிலையேற்பட்டுள்ளது. இலங்கையில் தென்பகுதி அரசியல் காரணமாகத் தமிழீழ விடுதலைப் புலிகளின் நியாயங்களை ஐரோப்பிய நாடுகள் ஏற்றுக் கொண்டிருக்கும் நிலையில், அமெரிக்கா மாத்திரம் தொடர்ந்தும் தமிழீழ விடுதலைப் புலிகளைக் குறைகூறிக்கொண்டிருக்க முடியாது. அந்த நாட்டில் அண்மையில் ஆலோசனை சேவை தொடர்பில் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாக நீதிமன்றம் ஒன்று தீர்ப்பு வழங்கியுள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

இலங்கையின் பொதுத்தேர்தலுக்கு இன்னும் சரியாக 30 நாட்களே எஞ்சியுள்ளன. இந்த 30 நாட்களும் - அரசியல்வாதிகளை பொறுத்தவரையில் 5 வருடங்களுக்கான முதலீட்டு நாட்களாகும். மக்களைப் பொறுத்தவரையில் இந்த 30 நாட்களும் அரசியல்வாதிகளுக்கான 5 வருடத் தொடர்பில் தீர்மானமெடுக்கவேண்டிய நாட்களாகும். பிழையான அரசியல்வாதிகள் தமது நோக்கில் வெற்றிபெற்று, மக்கள் தோற்றுப்போனால் நாடு மேலும் சீரழிந்து போகும். மறுபுறத்தில் மக்கள் சரியான தீர்மானத்தை எடுத்தால், அது நாட்டை சீரமைப்பதற்கான அத்திவாரத்தை ஏற்படுத்தும். எனினும் இந்த 30நாட்களுக்குள் நாட்டில் இடம்பெறப்போகும் நிகழ்வுகள்- நாட்டின் தேர்தல் முடிவுகளை மாற்றிவிடக் கூடிய சந்தர்ப்பத்தை உருவாக்கிவிடும். உதாரணமாக ஜனாதிபதி - ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்திற்கு எதிராக தொடர்ந்தும் நடவடிக்கைகளை மேற்கொண்டுவந்தால், அது அவரின் விழ்ச்சிக்கே இடமளிக்கும். இதில் நாட்டுக்கு நன்மை - தீமை எல்லாவற்றிற்கும் அப்பால், இது தேர்தல் காலம் என்பதை மட்டும் கருத்திற்கொள்ளவேண்டிய கட்டாயம் எழுந்துள்ளது. இதற்கு ஓர் உதாரணமாக- அண்மையில் ஜனாதிபதி - அமைச்சர் ரவூப் ஹக்கீமுக்கு எதிராக மேற்கொண்ட நடவடிக்கையொன்று, அவருக்குக் கிழக்கில் குறிப்பிட்ட எதிர்ப்பை ஏற்படுத்தியுள்ளது. ஒலுவில் துறைமுகம் அமைப்பதற்காக சுவீகரிக்கப்பட்ட காணிகளின் உரிமையாளர்களுக்கு நட்டஈடுகளை கொடுப்பதற்கு திறைசேரியின் அனுமதி இல்லாமல் துறைமுக அதிகார சபையிலிருந்து நிதி பெறப்பட்டதாகும். அதனை நிறைவேற்றுமாறு ஜனாதிபதி உத்தரவொன்றைப் பிறப்பித்தார். இது நாட்டின் சட்டவாக்கத்தைப் பொறுத்தவரை நியாயமான தீர்மானமாக இருக்கவில்லை. ஆனால், தற்போது தேர்தல் காலத்தில் ஜனாதிபதி அந்த முடிவை மேற்கொண்டமையினால், அமைச்சர் ரவூப் ஹக்கீமுக்கு ஒலுவில பிரதேசம் உட்பட திகாமடுல பிரதேசத்தில் செல்வாக்கை பெருப்பித்துள்ளது. எனவே அரசியல் கட்சிகளின் நகர்வுகள் - எதிர்வரும் தேர்தல் முடிவுகளைப் பாதிக்கும் கட்டங்களை ஏற்படுத்தப்போகின்றன. பிரதம மந்திரியின் அரசாங்கம் ஏதாவது மக்கள் நலன் நடவடிக்கைகளை எடுக்கும்போது, அதனைக் தடுக்கும் நடவடிக்கைகளை ஜனாதிபதி மேற்கொண்டால், தேர்தலில் ஜனாதிபதிக்கே அது பாதிப்பை ஏற்படுத்தும். அதேபோல, ஜனாதிபதியின் நல்லவிடயங்கள் எதனையும் ஐக்கிய தேசியக்கட்சி விமர்சிக்கப்போனால் - அது அந்தக் கட்சிக்கு தேர்தலில் பாதிப்பை ஏற்படுத்தும். எது எப்படியிருப்பினும், இரண்டு பிரதான கட்சிகளும் (மக்கள் விடுதலை முன்னணி உட்பட) சமாதானத்தை இலங்கை மக்கள் விரும்புகின்றார்கள் என்பதில் மாற்றுக் கருத்தை கொண்டிக்கவில்லை என்பது தெளிவு. அதேபோல, இலங்கை இராணுவத்தைக் கொண்டு, மீண்டும் ஒரு யுத்தத்திற்குச் செல்லமுடியாது என்பதையும் இந்தக் கட்சிகள் உணர்ந்துள்ளன.

இந்தவேளை, தேர்தலில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு ஒரு தீர்க்கமான சக்தியாகப் புறப்பட்டுள்ள அதேநேரம், மலையக தமிழ்க் கட்சிகள் பிரிந்தே களத்தில் நிற்கின்றன. எனினும் மலையக மக்கள் முன்னணி தனித்துப் போட்டியிடுவது மலையக மக்களின் கௌரவத்திற்கு வழிவகுத்துள்ளது.

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

**சிந்தனைக்கு**

"செவியிற் சுவைஉணரா வாய்உணர்வின் மாக்கள்
அவியினும் வாழினும் என்.

திருக்குறள்.

## நமது நோக்கு

### கதிர்காமரின் அலம்பல் ...

எதிர்வரும் பொதுத்தேர்தல் கால அரசியற்கட்சிகளின் செயற்பாடுகள் யாவும் கடந்த ஈராண்டு கால சமாதான முயற்சிகளையும், அதனால் ஏற்பட்ட பலாபலன்களையும் சிதைத்துவிடாமல் இருக்கவேண்டுமெனவும் தேர்தல் முடிந்தபின் பேச்சுவார்த்தை நகர்வுகளைத் தொடர்ந்து மேற்கொள்ள எடுக்கும் முயற்சிகளுக்கு நெருக்கடிகளை உருவாக்காத வரையில் இருக்கவேண்டுமெனவும் சர்வ தேச அமைதி விரும்பும் சமூகம் - இலங்கையைக் கோரியுள்ளது. குறிப்பாக, இது தொடர்பாக அண்மையில் பிரிட்டனின் துணை வெளிநாட்டமைச்சர் மைக் ஓ பிறென் வெளியிட்ட கருத்தானது - சிங்கள அரசியல் தலைமைகளை சற்று எச்சரிக்கும் தன்மையான - அழுத்தமான தொனியைக் கொண்டிருப்பதாக அவர்களால் உணரப்பட்டுள்ளதாகவே தெரிகிறது.

பிரிட்டிஷ் அமைச்சரின் கருத்து சரியானதும், நியாயமானதுமாக இருந்தாலும்... தென்பகுதி சிங்கள இனவாத தலைமைகளுக்கு, குறிப்பாக ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியினருக்கு அது கசப்பூட்டும் விடயமாக உள்ளது என்பதை அந்தமுன்னணியின் பிரதமபேச்சாளரும், ஜனாதிபதியின் ஆலோசகருமான லக்ஷ்மன் கதிர்காமரின் கொதிப்பான அறிக்கை மூலம் தெரியவந்துள்ளது.

பிரிட்டிஷ் அமைச்சரின் கருத்தை மறுதலித்து சாடும் வகையில் லக்ஷ்மன் கதிர்காமர் விடுத்துள்ள அறிக்கையொன்றில், தேர்தலை தமது இஷ்டப்படி நடத்தி முடிப்பதற்கு இலங்கையர்களை விட்டுவிடவேண்டும். எவரும் இதில் தலையீடு செய்ய அனுமதிக்கமுடியாதென்றும், சமாதான முயற்சிகளைச் சீர்குலைத்து விடக்கூடியவகையில் தேவையற்ற நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு இலங்கையர்கள் ஒன்றும் முட்டாள்களல்லர் என்றும் தெரிவித்துள்ளமையானது, பிரிட்டிஷ் அமைச்சர் 'வீசிய தொப்பி' தங்களுக்கே அளவானதாக இருக்கின்றது எனக் கதிர்காமர் நினைத்துள்ளமையையே உறுதிசெய்வதாகவுள்ளது.

தேர்தல் அனாவசியமான - தேவையற்ற - சமாதானத்தைக் குழப்பும் ஜனாதிபதியின், ஜனநாயகத் தன்மைக்கு எதிரான நடவடிக்கையாகவே இருப்பது தெளிவு. அமெரிக்காவோ, பிரிட்டனோ, ஜப்பானோ, ஏன் ஐரோப்பிய ஒன்றியமோ, ஜனாதிபதியின் இந்த ஆட்சிக் கலைப்பு மற்றும் தேர்தல் அறிவிப்பு நடவடிக்கைகளை அங்கீகரிப்பதாக இல்லை. சமாதான சூழலும், போர் நிறுத்தமும் தொடர்ந்து நிகழும் போது, நாடு பொருளாதார ரீதியில் அபிவிருத்தியைக் காணத்தொடங்கி மக்கள் அமைதியை நேசிக்கும்போது, நியாயமற்ற வகையில் பொய்யான காரணங்களைக் காட்டி, தனது அதிகார பலத்தைப் பிரயோகித்து ஆட்சியை தொடர்ந்து நடத்தக்கூடிய பலத்துடன் இருந்த அரசைக் கலைத்தமையானது, உலகின் பார்வையில் ஒரு ஜனநாயக உரிமை மீறலாகவே கருதப்படுகிறது என்பதில் இருவேறு கருத்துக் கிடையாது.

இது - எதிர்காலத்தில் சமாதான முயற்சிகளைத் தொடர்வதற்கு உகந்த சூழலை பாதிக்கும் என்றும், மீண்டும் யுத்தம் வெடிப்பதற்கான நிலை உருவாக்கிவிடும் எனவும் சர்வதேச சமூகம் அஞ்சுவதிலும் வியப்பில்லை.

இந்த இரண்டாண்டு கால அமைதிச் சூழல் சர்வதேச சமூகத்திற்கு இலங்கையின் சிங்கள இனவாத அரசியல் தலைமைகளின் நிஜ முகத்தை நன்கு உணரவைத்துள்ளமையே அவர்களின் இந்த அச்சத்திற்கு காரணமாகும்.

அதுவும் ஜனாதிபதி கடந்த காலங்களில் சமாதானத்தை சமாதானத்திற்கான யுத்தமாக மாற்றிய மனோபாவம் கொண்டவர் என்பதை உலகம் தெளிவாகவே உணர்ந்து விட்டுள்ள இன்றைய நிலையில் அடுத்த ஒரு ஆட்சி மாற்றம் ஏற்படும் பட்சத்தில், பேரினவாத சமாதான விரோத சக்திகளுடன் கூட்டணி அமைத்துள்ள ஜனாதிபதி சமாதானப் பேச்சுக்கள் தொடர அவரது சக தோழமைக் கட்சிகள் விடமாட்டார்கள் என்று உலகம் நினைப்பது நியாயமே.


கதிர்காமர் இன்றைய சமாதான முயற்சிகளை எப்படியெல்லாம் கிண்டல் செய்து - விமர்சித்து - அது சிதைந்து போகுமளவிற்கு முயற்சி எடுத்தார் என்பதெல்லாம் பாமர மக்களும் அறிந்த விடயங்களேயாகும்.

இலங்கையின் உள்விவகாரங்களில் வெளியார் தலையிடத் தேவையில்லை என அலறி - பிரிட்டிஷ் அமைச்சரைச் சாடும் இதே கதிர்காமர்தான் சில வாரங்களின் முன்னர் இலங்கை விவகாரங்களில் இந்தியா தலையீடு செய்யும் காலம் வந்துவிட்டது என்று கொக்கரித்தபடி இந்தியாவிற்கு அழைப்பு விடுத்தார் என்பதை எவரும் மறந்து விடவில்லை.

கொஞ்சக்காலத்திற்கு முன்னால் விடுதலைப் புலிகளை ஈவிரக்கமற்ற பயங்கரவாதிகள் எனப்பிரசாரம் செய்ய உலகெங்கும் காவடி எடுத்த கதிர்காமர்தான் இப்போது விடுதலைப் புலிகள் செயலூக்கம் நிறைந்த, வாய்மை தவறாதவர்கள் என பாராட்டுப்பத்திரம் வழங்குகின்றாரா என்றால் அவரது வாய்மை பற்றி கூறவே தேவையில்லை. விடுதலைப் புலிகளின் செயலூக்கம் மற்றும் வாய்மை குறித்து இன்று சர்வதேசம் நன்குணர்ந்து கொண்டே, அவர்களை மதித்து பேச்சுவார்த்தைகளை நடத்திவருகிறார் என்பதை கதிர்காமர் உணர்வது அவசியமாகும்.

கதிர்காமர் புத்தி சொல்லுமளவுக்கு சர்வதேசம் முட்டாள்களால் நிரம்பியிருக்கவில்லை என்பதே உண்மை... இதனைக் கதிர்காமர் புரிந்திருக்கவில்லை என்பதும் அதைவிட உண்மை.

## நாடும் நடப்பும்




### கிளிநொச்சி, வடமராட்சி கிழக்கு மக்கள் வாக்களிக்க

# முகமாலை சோதனைச் சாவடியில் கொத்தணி வாக்களிப்பு நிலையம்!

(கொழும்பு)

யாழ் குடாநாட்டின் விடுதலைப் புலிகளின் கட்டுப் பாட்டுப் பகுதியான வடமராட்சி கிழக்கு மற்றும் கிளிநொச்சி ஆகிய பகுதிகளைச் சேர்ந்த மக்கள் தேர்தலில் வாக்களிப்பதற்கான கொத்தணி வாக்களிப்பு நிலையம் முகமாலையிலுள்ள படையினரின் சோதனைச் சாவடியில் அமைக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

முன்னதாக, இந்த வாக்களிப்பு நிலையத்தை, இராணுவ சூனியப் பிரதேசத்தில் அமைப்பதற்கு திட்டமிடப்பட்டபோதும், இந்தப் பகுதியில் புதைக்கப்பட்டுள்ள கண்ணிவெடிகள் இன்னும் முழுமையாக அகற்றப்படாததைக் காரணம் காட்டி வாக்களிப்பு நிலையத்தை அங்கு அமைக்கமுடியாது எனத் தேர்தல் திணைக்களம் அறிவித்திருந்தது.

இதனையடுத்தே, தற்போது முகமாலை படையினரின் சோதனைச்சாவடியின் பொருட்களை ஏற்றியிறக்கும் பகுதியில் இந்த வாக்களிப்பு நிலையத்தை அமைப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக தெரியவருகிறது.

அத்துடன், வாக்களிக்கச் செல்லும் பொதுமக்கள் படையினரின் சோதனை நடவடிக்கைக்கு உட்படுத்தப்பட்ட பின்னரே, வாக்களிக்க அனுமதிக்கப்படுவர் எனவும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை, இந்த வாக்களிப்பு நிலையத்தை இராணுவ சூனியப் பிரதேசத்தில் அமைக்க முடியாவிட்டால், முகமாலை சோதனை நிலையத்தை சற்றுப் பின்னகர்த்தி, அவ்விடத்தில் வாக்களிப்பு நிலையத்தை அமைக்குமாறு யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் பத்மநாதன், தேர்தல் ஆணையாளரிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இதன்மூலம், பொதுமக்களைச் சோதனையிட வேண்டிய தேவை ஏற்படாது எனவும், அதனால் வாக்களிக்கச் செல்லும் பொதுமக்களுக்கு ஏற்படவிருக்கும் அசௌகரியங்களும், வாக்களிக்கும் வாக்காளர் எண்ணிக்கையில் அது ஏற்படுத்தக்கூடிய பாதிப்புக்களும் தவிர்க்கப்படும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேசமயம், மட்டக்களப்பு மாவட்டத்தில் இராணுவ சூனியப் பிரதேசத்தில் கொத்தணி வாக்களிப்பு நிலையத்தை அமைப்பதற்கு இணக்கம் காணப்பட்டுள்ளதாக மாவட்டத்தின் தமிழரசுக் கட்சித் தலைமை வேட்பாளர் ஜோசப் பரராஜசிங்கம் தெரிவித்தார்.

வடபகுதி போன்று மட்டக்களப்பு மாவட்டத்தில் இராணுவ சூனியப் பிரதேசங்களில் கண்ணிவெடி அபாயம் இல்லாததால், இப்பகுதியில் வாக்களிப்பு நிலையம் அமைக்கப்படுவதில் தடையேதுமிருக்காது எனத் தாம் நம்புவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

ஆனாலும், வாக்களிப்பு நிலையங்களை இராணுவ சூனியப் பிரதேசத்துக்குள் அமைப்பதற்கு ஈ.பி.டி.பி. மற்றும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் வேட்பாளர் எம்.எல். ஏ.எம். ஹிஸ்புல்லா ஆகியோர் எதிர்ப்புத் தெரிவித்து வருவதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

# தேர்தல் குறித்த புலிகளின் நிலைப்பாடு; தேசிய சமாதான சபை வரவேற்கிறது!

வடக்கு - கிழக்குப் பகுதிகளில் வாக்காளர்கள் தமது வாக்குகளை அளிக்க தாம் தடையாக இருக்கப்போவதில்லை என்று விடுதலைப் புலிகள் அறிவித்திருப்பதை சுதந்திர நியாய தேர்தலுக்கான மக்கள் செயற்பாட்டுப் பிரிவு மற்றும் தேசிய சமாதான சபை ஆகியன வரவேற்றுள்ளன.

அத்துடன் வடக்கு - கிழக்குப் பகுதிகளில் எந்தவொரு அரசியல் கட்சியும் போட்டியிட முடியும் என்று விடுதலைப் புலிகள் தெரிவித்துள்ளனர்.

ஜனநாயக சமுதாயமொன்றில சுதந்திரமாக வெளியாரின் பயமுறுத்தலின்றி வாக்களிக்கும் உரிமை பிரஜைகளுக்கு இன்றியமையாததாகும்.

கடந்த இரண்டு தசாப்தங்களாக விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் தேர்தல் அதிகாரிகளால வாக்களிப்பு நிலையம் அமைக்க முடியாமல் இருந்தது.

எதிர்வரும் பொதுத்தேர்தலில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பிரதேச மக்கள் தமது பகுதிகளிலேயே தேர்தல் திணைக்களத்தின் கண்காணிப்புடன் வாக்களிக்க ஏற்பாட்டை செய்துகொடுக்க தேர்தல் ஆணையாளர் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் இந்த இரு அமைப்புகளும் மேலும் கேட்டுக்கொண்டன.

# தேர்தல் கண்காணிப்பு பணிக்கு இரண்டு நாடுகள் இணக்கம்!

(கொழும்பு)

எதிர்வரும் ஏப்ரல் மாதம் 2 ஆம் திகதி நடைபெறவுள்ள பொதுத்தேர்தலில் கண்காணிப்புப் பணியில் ஈடுபடுவதற்கு இரண்டு நாடுகள் உறுதிமொழி அளித்துள்ளன.

பங்களாதேஷிலிருந்து 37 பேரும் நேபாளத்திலிருந்து 27 பேரும் தேர்தல் கண்காணிப்புப் பணிகளுக்காக இலங்கைக்கு வருகை தரவுள்ளனர்.

நேற்றுமுன்தினம் இரு நாடுகளின் தேர்தல் அதிகாரிகளும் தேர்தல் ஆணையாளருக்கு கடிதம் மூலம் இந்தத் தகவலைத் தெரிவித்தனர்.

இதேவேளை பொதுநலவாய நாடுகளில் இருந்து 20 பேர் கண்காணிப்புப் பணிக்காக வருகை தரவுள்ளனர். இது இன்னமும் முடிவாகவில்லை.

ஐரோப்பிய யூனியனில் இருந்து 61 பேர் 2001 ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலுக்கான கண்காணிப்பாளர்களாக பணியாற்றியிருந்தனர். ஐரோப்பிய யூனியனில் இருந்து கூடுதலான கண்காணிப்பாளர்களை இந்த முறையும் எதிர்பார்ப்பதாக தேர்தல் திணைக்களம் தெரிவித்தது.

தேர்தல் வன்முறைகள் இடம்பெறும் எனக் கருதுகின்ற இடங்களிலும், கொத்தணி வாக்களிப்பு நிலையங்களிலும் இவர்கள் கடமையில் ஈடுபடுத்தப்படவுள்ளனர்.

இவர்களுக்கான பொலிஸ் பாதுகாப்பு முழுமையான அடிப்படையில் வழங்கப்படும் எனவும் தேர்தல் திணைக்களம் தெரிவித்தது.

பொதுத் தேர்தல் 2004 - சிலம்பு -

# நாற்பது ஆண்டுகளுக்கு முன்னர் தந்தை செல்வா கூறியது...



நாடாளுமன்றத் தேர்தல் நடைபெறப்போகிறது. சிங்கள அரசியல் கட்சிகளின் அதிகாரப் போட்டியால், காலம்முந்தி இந்தத் தேர்தல் மக்கள்மேல் திணிக்கப்பட்டுள்ளதாக கூறுவர். ஆனால், தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் இந்தத் தேர்தல் வரவேற்கப்படவேண்டிய ஒன்றாகும். 1977 இல் தமிழ் மக்கள் தமது ஆணையைத் தேர்தல்மூலம் வெளிப்படுத்தினர். தமிழர் விடுதலைக் கூட்டணியைப் பெருவெற்றி பெறச்செய்து, தமிழீழத்திற்கு சுயாட்சி வேண்டும் என்று மக்கள் தீர்ப்பு வழங்கினர். தமிழர் கூட்டணிக்கு மாத்திரம் அல்ல, தமிழர் சுயாட்சிக் கழகம், மா மனிதர் குமார் பொன்னம்பலம் ஆகியோருக்கு அளிக்கப்பட்ட வாக்குகளும் தமிழீழத்திற்கு ஆதரவாக அளிக்கப்பட்ட வாக்குகள் ஆகும். 1977 இற்குப் பின்னர் பல தேர்தல்கள் நடைபெற்றுள்ளன. ஆனால், அவை அனைத்தும் மக்கள் ஆட்சி மரபுகளுக்கு அமைவாக நடைபெறவில்லை. தமிழ் மக்கள் ஏற்றுக்கொண்ட தேர்தல்களாகவும் இருக்கவில்லை. 10, 15 வாக்குகளைப் பெற்றவர்கள் - தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்துவதாக நாடாளுமன்றம் சென்ற வெக்கங்கெட்ட தேர்தல்கள் அவை. ஆளும் வர்க்கத்தினருக்கு ஆதரவாகச் செயற்பட்டவர்கள் - இராணுவ, பொலிஸ் உதவியுடன் தேர்தலில் வெற்றிபெற்றனும், அவ்வகைத் தேர்தல்களிலே ஆகும். ஆனால், இம்முறை நடைபெறும் தேர்தல், தமிழ் மக்கள் தமது ஆணையை மீண்டும் வழங்கச் சந்தர்ப்பம் கொடுத்துள்ளது. எனவேதான் இது வரவேற்கப்படவேண்டிய தேர்தலாகவுள்ளது.

இந்தத் தேர்தலில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு - தமிழ் மக்களின் சுயாட்சி உரிமையை வலியுறுத்தி, தேர்தலைச் சந்திக்கிறது. சிங்கள ஆட்சியாளர்களின் ஆதரவாளர்கள் சுயேட்சையாகவும், கட்சிகளாகவும் மக்கள் முன் வருகின்றனர். சண்டை ஓய்ந்த நிலையில், தமிழ் மக்களது உண்மையான வேட்கை என்னவென்று உலகத்திற்குக் காட்டுவதற்கான தேர்தலாக இதனைத் தமிழ் மக்கள் நோக்கவேண்டும். தமிழ் மக்களது இலட்சியம் எது? தமிழ் மக்கள் வேண்டுவது எது. தமிழ் மக்கள் யார் பின்னால் உள்ளனர் என்பதை முழு உலகுக்கும் எடுத்துக்காட்ட கிடைத்த சந்தர்ப்பமாக இந்தத் தேர்தலைக் கருதவேண்டும்.

1983 இல் மன்னாரில் மாநாட்டை முடித்து விட்டுப் புறப்பட்ட தமிழர் விடுதலைக்கூட்டணி, இதுவரை எந்த மாநாட்டையும் தமிழ் மண்ணில் நடத்தவில்லை. மாநிலமான மாநாடு தான் தமிழர்விடுதலை கூட்டணியின் அதியுயர் பீடமாகும். மாநாடு கூட்டப்படாத நிலையில், தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு தலைவர் எவ்வாறு உருவானார் என்பது கேள்விக்குரியது. இவர்கள்தான் தமிழர் விடுதலைக் கூட்டணிக்குப் பூட்டுப்போட்டுவிட்டு, சுயேட்சையாக மக்கள் முன்வந்துள்ளனர். இவர்களின் பழைய வரலாற்றை எவரும் மறந்திருக்கமாட்டார்கள். நாடாளுமன்றத்திலேயே தந்தை செல்வாவை ஏழைத்தக் காந்தியாம், சிங்கள மக்கள் வன்னியில் குடியேறக் கூடாதாம். இது எந்தக் காந்தியம் என்று கேட்டுச் சிங்களக் குடியேற்றத்தை ஆதரித்தவர், பெரும்பான்மை மக்களின் மதமான பௌத்தம் அரச மதமாவது தவறில்லை என்று அரசியல் அமைப்புச் சபையில் வக்காளத்து வாங்கியவர், 1972 இல் சிறிமாவோவினால் கொண்டுவரப்பட்ட அரசியல் அமைப்புக்கு தந்தை செல்வா கொண்டுவந்த திருத்தங்கள் அத்தனையையும் எதிர்த்து வாக்களித்தவர். அரசியல் அமைப்புச் சபையைவிட்டு தமிழரசுக் கட்சியினர் வெளியேறியபோது, வெளியேறுங்கள் திரும்பி வராதீர்கள் என்று ஏளனம் பேசியவர், தற்பொழுது தந்தை செல்வாவின் கூட்டணியே தனது கூட்டணி என்று கூறிக் கொண்டு சுயேட்சையாக மக்கள் முன்வருகின்றார்.

இத்தகையவர்களுக்கு என்ன செய்ய வேண்டும் என்று தந்தை செல்வா அன்றே கூறியிருந்தார். ஆம், அதனை அவர் கூறி 40 ஆண்டுகள் ஓடிவிட்டன. இப்பொழுது 2004 ஆம் ஆண்டு தந்தை செல்வா கூறியது 1964 இல். அப்பொழுது நாடாளுமன்றத் தேர்தல் தொகுதிவாரியாக நடைபெறும். அப்பொழுது கோப்பாய் நாடாளுமன்றத் தொகுதி சிறப்பான இடத்தைப் பெற்றிருந்தது. 1952 இல் நடைபெற்ற தமிழரசுக்கட்சியின் முதல் நாடாளுமன்றத் தேர்தலில் தந்தை செல்வா காங்கேசன்துறைத் தொகுதியில் தோல்வியடைந்தார். மற்றவர்களும் தோற்றுப்போனபோதும், கோப்பாய் தொகுதி மட்டும் தமிழரசுக் கட்சியை வெற்றிபெற வைத்தது. கோப்பாய் கோமான் என்று புகழப்பட்டவரும், வாழ்விடத்தைக் காத்த வன்னியசிங்கம் என்று வாழ்த்தப்பட்டவருமான கு.வன்னியசிங்கம், கோப்பாய் தொகுதியில் தமிழரசுக் கட்சியில் வெற்றிபெற்றார் (திருகோணமலையின் இராசவரோதயமும் வெற்றி பெற்றிருந்தார்). 1956 ஆம் ஆண்டும் வெற்றிபெற்ற வன்னியசிங்கம் இளவயதில் இறந்துவிட்டார். தமிழரசுக் கோட்டை என்று கூறப்பட்ட கோப்பாய்த் தொகுதியில், தமிழரசுக் கட்சி வேட்பாளராக மு.பாலசுந்தரம் நிறுத்தப் பட்டு, பெருவெற்றிபெற்றார். 1960 ஆம் ஆண்டு இரு பொதுத் தேர்தல்கள் நடைபெற்றன. இரண்டிலும் மு.பாலசுந்தரமே வெற்றிபெற்றார்.

மு.பாலசுந்தரம் தவறாகத் தனது வெற்றியை கணித்துவிட்டார். தமிழரசுக் கட்சியால் தான், தான் வெற்றிபெற்றதை மறந்து, தனது தனிப்பட்ட வெற்றியாக அதனைக் கருதினார். இந்த எண்ணம் வளர்ந்துவிடவே அவர் கட்சியுடன் முரண்படத்தொடங்கினார். இந்த முரண்பாட்டின் காரணமாக மு.பாலசுந்தரத்தை கட்சியிலிருந்து மெதுவாக நீக்குவது என்று முடிவாகிற்று. எனவே, பெரியவர் தந்தை செல்வா கோப்பாய் தொகுதியிலுள்ள கட்சிக் கிளையைப் புனரமைக்கப் புறப்பட்டார். தள்ளாடும் நிலையில் மக்களைச் சந்திக்கப் புறப்பட்ட அந்தப் பெரியவர், ஊரூராகச் சென்று கிளைகளை மறுசீரமைத்தார். அப்பொழுது ஒரு ஊரிலே கிளை புனரமைப்புக் கூட்டம் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. அந்தக் கூட்டத்தில் ஒருவர் எழுந்து - ஐயா எல்லாத் தொகுதிகளிலும் கட்சி வேலைகள் நடைபெறும் போது, தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர் இருப்பாரே. ஆனால், கோப்பாய்த் தொகுதியில் மட்டும் நாடாளுமன்ற உறுப்பினரைக் காணவில்லையே. ஏன் ஐயா என்றார்? அந்தக் கேள்விக்குத் தந்தை செல்வா கூறிய பதில் தான் 40 ஆண்டுகள் சென்ற பின்பும் இன்றும் பொருந்துவதாக உள்ளது. ஒரு அரசியல் அறிஞனது கூற்று எவ்வாறு ஒரு இனத்துக்கும் நாட்டுக்கும் பல காலம் பலனளிக்கக்கூடியதாக இருக்குமோ, அவ்வாறே அவரது பதிலும் இருந்தது.

தந்தை செல்வா கூறினார் - நீங்கள் நல்ல ஒரு கேள்வி கேட்டீர்கள். தற்போதைய நாடாளுமன்ற உறுப்பினர்கள் எமது கட்சிக் கொள்கையை மீறிவிட்டார்கள். அவர் மேல் நாம் நடவடிக்கை எடுத்துள்ளோம். எனவே, அவர் இங்கு அழைக்கப்படவில்லை. நாங்கள் தமிழ் மக்களின் நன்மைக்காகப் பாடுபடுகின்றோம். எங்களுக்குக் கொள்கைதான் பெரிது. தனி மனிதர் அல்ல. எனவே, கட்சிக் கொள்கைக்காகப் பாடுபடவேண்டியது மக்களுடைய கடமை. இந்தச் செல்வநாயகமும்கூட கட்சிக் கொள்கைகளை கைவிட்டால் நீங்கள் என்னை ஆதரிக்கக்கூடாது. கட்சியின் இலட்சியத்தையே ஆதரிக்கவேண்டும் என்று கூறினார். அந்த வாக்கை ஏற்ற தமிழ் மக்கள்- தமிழரசுக் கட்சி வேட்பாளர் சி.கதிரவேற்பிள்ளையை வெற்றிபெறவைத்தனர். கோப்பாய் தமிழரசுக் கோட்டை என்று மக்கள் மீண்டும் உறுதி செய்தனர். பாலசுந்தரம் 550 வாக்குகளைக் கூட பெறமுடியாமல் படுதோல்வியடைந்தார். இவர் தனிமனித ஒழுக்கம் நிறைந்தவர், சிறந்த நாடாளுமன்றவாதி, மிகப்பெரிய விவாதப் பேச்சாளர், சிறந்த வழக்கறிஞர், சட்டமேதை - இவ்வாறான பல சிறப்பு அம்சங்களைக் கொண்டவர். கொள்கையை மீறியதால் மக்களால் தோல்வியடையச் செய்யப்பட்டார். இந்தநிலையில், இன்று மக்கள் முன்பு வருபவர்கள் யார்? தமிழ் மக்களுக்காக என்ன செய்தார்கள் அல்லது பாலசுந்தரம் போல் இயல்புகளை யாவது கொண்டுள்ளார்களா? சிங்கள ஆட்சியாளரைத் திருப்திப்படுத்துவதே அவர்களது இலட்சியம். 18,000 மாவீரர்களின் கனவுகள் நிறைவேறவேண்டுமெனில், தந்தை செல்வா கூறியவாறு கொள்கைப்பிடிப்பும் இலட்சியமும் கொண்டவர்களை ஆதரிக்கவேண்டியது தமிழ் மக்களது கடப்பாடாகும்.

உலக நாடுகள் தமிழ் மக்களது தீர்ப்பை எதிர்பார்த்திருக்கின்றன. தமிழ்த் தேசிய பேரவைக்குப் பின்னால் தமிழ் மக்கள் உறுதியாகத் திரண்டுள்ளனர். விடுதலைப் புலிகளே தமிழ் மக்களின் ஏகபிரதிநிதிகள் என்று காட்ட வேண்டிய காலம் இது.

"எங்கள் பகைவர் எங்கோ மறைந்தார்
இங்குள்ள தமிழர் ஒன்றாதல் கண்டே"

என்ற புரட்சிக் கவிஞன் பாரதிதாசனின் வரிகளுக்கு உயிர் கொடுப்போம்.

புலம்பெயர் வாழ்வின் பதிவுகள் பகுதி XVI - சிவா சின்னப்பொடி

# தொடரும் அகதிவாழ்வின் அவலங்கள்

(நேற்றைய தொடர்ச்சி...)

அந்தக் காலத்தில் தொலைபேசி அழைப்பு எடுப்பதற்கு இப்போதுள்ளது போன்ற சலுகை விலை தொலைபேசி அட்டைகள் (tele card) இருக்கவில்லை. இணை



யத்தளம் என்பதும் கிடையாத நிலையில், அரச நிறுவனங்களாக இருந்த ரெலிகொம் நிறுவனங்களின் இணைப்புக்களூடாவே அழைப்புக்களை எடுக்கவேண்டியிருந்தது. பாரிஸ் நகரிலுள்ள ஒருவர் கொழும்புக்கு எடுக்கும் தொலைபேசி அழைப்புக்கு ஒரு நிமிடக் கட்டணம் 28 பிராங் ஆக இருந்தது.

தனக்கு மனைவியாக வரப்போகும் பெண்ணுடன் பாரிஸிலிருந்து ஒருவர் 30 நிமிடங்கள் கதைத்தால், 840 பிராங் பறந்துவிடும். இங்கே உள்ளவர்களுக்கு தொலைபேசியில் கதைக்கும் ஒவ்வொரு நிமிடமும் கட்டணம் விஷம் போல ஏறிச்செல்லும் என்பது தெரியாது. அங்குள்ளவர்களும் அப்போது அதைச் சொல்ல விரும்புவது இல்லை.

சிலர் தமக்கு வரப்போகும் மனைவியிடம் தினசரி கதைப்பார்கள். சிலர் வாரத்தில் இரண்டு அல்லது மூன்று தடவைகள் கதைப்பார்கள். இப்படிக் கதைத்துக் கதைத்தே-தொலைபேசிக் கட்டணத்தை கட்டுவதற்காகக் கடன்பட்ட பலர் இருக்கிறார்கள். மாதத்திற்கு 28 ஆயிரம், 30 ஆயிரம் பிராங்கிற்குக் கதைத்த சாதனையாளர்களும் இருக்கிறார்கள்.

பொதுவாக அந்தக் காலகட்டத்தில் புலம்பெயர்ந்த தமிழர்கள் பலரைக் கடனாளியாக்கிய காரணிகளில் தொலைபேசி முதன்மைக் காரணியாக இருந்தது.

இங்கே ஊரிலுள்ள பல பெற்றோர்கள் "வெளிநாட்டு மாப்பிள்ளை" என்ற காரணத்தை வைத்து, பெண் வீட்டாரிடம் சீதனம் வாங்கிய போதிலும், அங்குள்ள ஒவ்வொரு ஆணும் தனக்கு மனைவியாக வரப்போகும் பெண்ணுக்கு நிறைய செலவளிக்க வேண்டியனாக இருந்தான்.

புலம்பெயர்ந்த நாடுகளில் அகதி அந்தஸ்த்து பெற்றவர்கள் தமிழகத்துக்கோ, சிங்கப்பூருக்கோ, தாய்லாந்தின் பாங்கொங் நகருக்கோ பெண்ணை வரவழைத்து திருமணம் செய்தார்கள்.

அகதி அந்தஸ்த்து பெற்ற ஒருவர் தனது தாய் நாட்டைத் தவிர மற்ற எல்லா நாடுகளுக்கும் சென்றுவரமுடியும்.

நிரந்தர வதிவிட அனுமதி பெற்றவர்கள்- தாய் நாட்டுக்கும் செல்லமுடியும். இவர்கள் கொழும்புக்குச் சென்று திருமணம் செய்து வந்தார்கள்.

வதிவிட அனுமதி இல்லாதவர்களும், தற்காலிக அனுமதி பெற்றவர்களும் தாங்கள் தங்கியிருக்கும் நாட்டைவிட்டு, (சிலர் நகரங்களைவிட்டு) வெளியே சென்றுவர முடியாததனால், பிரயாண முகவர்களுக்குப் பெருந்தொகைப்பணத்தைக் கொடுத்துப் பெண்ணைத் தாங்கள் தங்கியிருக்கும் நாட்டுக்கு வரவழைத்து திருமணம் செய்துகொண்டார்கள்.

"ஒருவர் தனது தாய்நாட்டில், தனக்குரிய அடிப்படை உரிமைகளை அனுபவிக்க தடை ஏற்படும் பட்சத்தில் - சமூகம், இனம், மதம், மொழி என்கின்ற அடிப்படையில் அவர்மீது பாரபட்சம் காட்டப்படுகின்றபோது, அதற்கு எதிரான நியாயமான அரசியல் செயற்பாடுகள் அல்லது தான் மேற்கொண்ட போராட்ட நடைமுறை காரணமாக அவருடைய உயிருக்கு அச்சுறுத்தல் ஏற்படுமாக இருந்தால் - அந்த அச்சுறுத்தலுக்கு எதிரான பாதுகாப்பை - தனது நாட்டு அரசாங்கத்திடம் கோரிப்பெற முடியாத பட்சத்தில், அரச இயந்திரமும் - அரச படைகளுமே அந்த அச்சுறுத்தலுக்கு காரணமாக இருக்கும் பட்சத்தில் - அவர் தனது தாய்நாட்டைவிட்டு வெளியேறி, தனக்கு பாதுகாப்பு என தான் கருதும் ஒரு நாட்டில் அரசியல் தஞ்சம் கோரலாம்" இது அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் சபையின் ஜெனீவா சாசனமாகும்.

இந்த சாசனத்தின் அடிப்படையிலேயே- அநேகமான மேற்குலக நாடுகள் புலம்பெயர்ந்த ஈழத்தமிழர்களுக்கு அரசியல் தஞ்சம் வழங்கியிருந்தன.

இந்த ஜெனீவா சாசனத்தில் 'அச்சுறுத்தல்' என்ற விடயமாகும். 'போராட்ட நடைமுறைகள்' என்ற விடயமும் தெளிவான முறையில் வரையறுக்கப்படவில்லை.

அரசியல் தஞ்சம் வழங்கும் ஒவ்வொரு நாடும் இந்த இரண்டு விடயங்களையும் தங்களுடைய நாட்டின் குடிவரவுச் சட்டங்களுக்கு ஏற்றவிதத்தில் அர்த்தப்படுத்தி, அந்த அர்த்தத்தையே அளவுகோலாகவும் வைத்திருந்தன. ஒருவர் தனது உயிருக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டது என்று கூறும்போது - காயங்கள், தழும்புகள், வடுக்களைக் காட்டும்படி சில நாடுகள் கேட்டன. அச்சுறுத்தல் என்பது வாய்மொழி மூலமான மிரட்டல்கள் - தாக்குதல்- மற்றும் கொலை முயற்சிகள் மூலமாகவும் நடக்கலாம் என்று அகதிகள் நலன்பேணும் அமைப்புக்கள் வாதிட்டபோதிலும், பல நாடுகள் அதை ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கவில்லை.

அதேபோல் போராட்ட நடைமுறை என்கின்றபோது பல நாடுகள் - விடுதலைப் போராட்டத்துக்கும் - பயங்கரவாதத்துக்கும் இடையிலான வேறுபாட்டை கணக்கிலெடுக்கத் தவறிவிட்டன. இங்கிலாந்து, ஜேர்மனி, சுவீஸ் போன்ற நாடுகள் - ஆயுதப் போராட்ட அமைப்பில் உறுப்பினராக இருந்த ஒருவருக்கு அரசியல் தஞ்சம் வழங்குவதில்லை. ஆனால் பிரான்ஸ், டென்மார்க் போன்ற நாடுகள் இதற்கு எதிர்மாறான கருத்தைக் கொண்டிருந்தன.

போர்ச் சூழல் காரணமாக தாயகத்தைவிட்டுப் புலம்பெயர்ந்த தமிழர்களுக்கு அநேகமாக இந்த அரசியல் தஞ்சக் கோரிக்கைக்கான அடிப்படைகள் தெரிந்திருக்கவில்லை. இந்த அரசியல் தஞ்சக் கோரிக்கை மனுக்களை எழுதுவதற்கென்று அங்கே குட்டி அலுவலகங்களை திறந்துவைத்திருந்த "கேஸ் காரர்கள்" கூட (புலம்பெயர் தமிழர்கள் அவர்களை இப்படித்தான் அழைப்பது வழக்கம்)- சட்டம் படித்து, பட்டம்பெற்று வந்தவர்கள் அல்ல. தங்கள் அனுபவத்தின் அடிப்படையில் அரசியல் தஞ்ச மனுக்களை தயாரித்துக் கொடுக்கும் இவர்கள், புலம்பெயர்ந்து செல்லும் நம்மவர்களின் உண்மையான பிரச்சினைகளை எழுதுவதில்லை. தங்கள் இஷ்டப்படி சம்பவங்களை உருவாக்கிப் பெரிய கதையையே எழுதிவிடுவார்கள்.

அரசியல் தஞ்சக் கோரிக்கை மனு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படும்போது, கேஸ்காரர் எழுதிய கதையில் இருக்கும் விபரங்களைச் சரியாகச் சொல்லமுடியாமல் போன காரணத்தினால், பலரது விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டிருக்கின்றன.

இந்தக் குழறுபடிகள் காரணமாகவே நம்மவர்கள் - அகதி அந்தஸ்த்து பெற்றவர்கள், நிரந்தர விதிவிட அனுமதி பெற்றவர்கள், தற்காலிக விதிவிட அனுமதி பெற்றவர்கள் என்று பல பிரிவுக்குள் அடக்கப்பட்டனர்.

நம்மவர்களுக்கு அதிகளவு அகதி அந்தஸ்த்து வழங்கிய நாடு பிரான்ஸ். அங்கு 2000 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் வரை 60 ஆயிரம் பேருக்கு அகதி அந்தஸ்து வழங்கப்பட்டிருப்பதாக **ofpra** எனப்படும் அகதிகள் திணைக்கள குறிப்பிலிருந்து அறியமுடிகிறது.

கனடாவில் 3 இலட்சம் தமிழர்கள் வாழ்ந்தபோதும், அவர்களுக்கு வதிவிட அனுமதியே பெரும்பாலும் வழங்கப்பட்டிருக்கிறது.

ஐரோப்பாவில் தற்காலிக வதிவிட அனுமதி வழங்கிய நாடுகளாக ஜேர்மனியையும், சுவிஸையும் குறிப்பிடலாம். இந்த இரண்டு நாடுகளும் முதலில் தற்காலிகமாக வழங்கியிருந்த வதிவிட உரிமையை, 5 முதல் 8 வருடம் தொடர்ச்சியாக வேலை செய்திருந்தால் நிரந்தர வதிவிட உரிமையாக மாற்றிக் கொடுத்திருந்தனர். அகதி விடயத்தில் மிகக் கடுமையான சட்டங்களையும் - மிக மோசமான நடவடிக்கைகளையும் மேற்கொண்ட நாடுகளில், அவுஸ்திரேலியா முதலிடம் வகித்தது. அதற்கு அடுத்த இடத்தில் ஒஸ்ரியா இருந்தது.

(தொடரும்)

# ஒஸ்கார் விருதுகளைப் பெறும் நடிக, நடிகையர் இன்று தெரிவு



ஹொலிவூட் படவுலகின் மிகவுயர்ந்த விருதாக கருதப்படுவது ஒஸ்கார் விருது. ஹொலிவூட் படவுலகில் சிறந்த நடிகர் - நடிகைகள், சிறந்த படம், சிறந்த இயக்குநர்கள், கலைஞர்கள் ஆண்டுதோறும் தேர்ந்தெடுத்து, அவர்களுக்கு ஒஸ்கார் விருது வழங்கப்பட்டு வருகிறது.

76 ஆவது ஆண்டாக ஒஸ்கார் விருது பெறும் விழா அமெரிக்காவின் லொஸ்ஏஞ்சல் நகரில் இன்று இரவு நடக்கிறது. வழக்கமாக இந்த விழா வண்ணமிகு கோலாகல விழாவாக நடைபெறும். ஆனால் இந்தமுறை தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தக்கூடும் என்பதால் அதிக ஆடம்பரம் இன்றி எளிமையாக விழா நடத்தப்படுகின்றது.

இதுவரை இல்லாத அளவிற்கு பலத்த பாதுகாப்பு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. ஒஸ்கார் விருது பெறும் சிறந்த நடிகை தேர்வுக்கு ஐந்து நடிகைகள் சிபார்சு செய்யப்பட்டுள்ளனர். இந்த 5 பேரில் ஒருவருக்கு சிறந்த நடிகைக்கான ஒஸ்கார் விருது வழங்கப்படும்.

அவர்களின் பெயர் விபரம் வருமாறு -

டயானி கீட்டன் (படம்- சம்திங்ஸ் கோட்டா சிவ்ஸ்), நவோவி வாட்ஸ் (21 கிராம்), சார்லிஸ் தேரான் (மான்ஸ்டர்), சமந்தா மார்ட்டன் (இன் அமெரிக்கா), கீஷா காஸ்ட்டில் ஹுயூக்ஸ் (வேல் ரைடர்).

சிறந்த நடிகர்களுக்கான ஒஸ்கார் விருது பெற சிபார்ஸ்சு செய்யப்பட்டவர்கள் விபரம் வருமாறும்-

ஜுடிலா (கோல்டு மவுண்டன்), பில்முரே (லாஸ்ற் இன் ட்ரான்ஸ்லேஷன்), ஜானிடெப் (பைரேட்ஸ் ஒவ் தி கருபியன்), சீன் பென் (மிஸ்ரிக் றிவர்), பென் கிங்ஸ்லி (அவுஸ் ஒவ் சான்ட் அன்ட் பாக்),

சிறந்த படத்துக்கான விருதுகள் பெற சிபார்சு செய்யப்பட்டபடங்கள் -

தி லார்ட் ஒவ் தி றிங்ஸ் திருட்டன் ஒவ் தி கிங்ஸ், லாஸ்ற்ட் இன் டிரான்ஸ்லேஷன், மாஸ்ரர் அன்ட் கொமாண்டர். தி பார்ஷைட் ஒவ் தி வேர்ல்ட், மிஸ்டிக் றிவர், சீ விஸ்கட்.

சிறந்த இயக்குநர்களாக ஐந்து பேர் சிபார்ஸ்சு செய்யப்பட்டுள்ளனர் அவர்களின் பெயர்கள் வருமாறு -

ஜாக்ஸ்சன், வீன், கோப்போரோ, ஈஸ்டவுட், மேரிலிங்.

இந்தியாவின் சார்பில் எந்த நடிகரோ, நடிகையோ, படமோ சிபார்சு செய்யப்படவில்லை.

## துப்பாக்கிப் பிரயோகத்தில் இரு இஸ்ரேலியர்கள் பலி

பலஸ்தீன துப்பாக்கிதாரி ஒருவரினால் மேற்குக்கரைப் பிரதேசத்தில் இரு இஸ்ரேலியர்கள் கொல்லப்பட்டுள்ளனர். 'கெபோன்' மற்றும் 'பீர்சேபா' ஆகிய பிரதேசங்களுக்கிடையே வண்டி ஒன்றில் பிரயாணம் மேற்கொண்ட இருவரே கொல்லப்பட்டுள்ளனர்.

இந்த பிரதேசங்களில் வண்டிப் பிரயாணிகள் மீது துப்பாக்கிப் பிரயோகம் அடிக்கடி நிகழ்த்தப்படுவதாக செய்தியாளர் ஒருவர் தெரிவித்தார். துப்பாக்கிப்பிரயோகத்தை மேற்கொண்டவர் வண்டி ஒன்றில் பிரயாணத்தை மேற்கொண்டவர் எனத் தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சம்பவத்திற்கு முன் பலஸ்தீன தற்கொலைக் குண்டுதாரி ஒருவர் இராணுவ வண்டி ஒன்றின் முன் மேற்கொண்ட தற்கொலைக் குண்டுத்தாக்குதலில் மரணமடைந்தார்.

ஜெருசலேத்தில் புனிதப் பிரதேசம் ஒன்றில் கல் எறிந்த பலஸ்தீனர்கள் மீது இஸ்ரேலியப்படையினர் சேதம் விளைவிக்காத கைக்குண்டுகளை வீசிக் கலைத்ததாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.




## ஐவரிக்கோஷ் நாட்டிற்கு அனுப்ப தயார்நிலையில் 6000 துருப்புக்கள்!

ஐக்கிய நாடுகளின் பாதுகாப்புச் சபை 6000 சமாதானத் துருப்புக்களை ஐவரிக்கோஷ் நாட்டிற்கு அனுப்ப அங்கீகாரம் வழங்கியுள்ளது.

துருப்பினரின் எண்ணிக்கை அதிகரித்துக் காணப்படுவதாக ஆரம்பத்தில் தெரிவித்த போதிலும், ஐக்கிய நாடுகளின் பாதுகாப்புச் சபையின் கருத்துக்களுடன் அமெரிக்கா இணக்கம் கண்டுள்ளது.

இதுவரை 4000 துருப்பினரை பிரான்ஸ ஐவரிக்கோஷ்ற்கு அனுப்பிவைத்துள்ளது மேலும் 150 பொலிஸாரை அனுப்புவதற்கும் பாதுகாப்புச் சபையுடன் இணக்கம் கண்டுள்ளது.

இது தொடர்பாக கருத்துத்தெரிவித்த ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் கோபி அனான் ஐவரிக்கோஷ்ரில் ஐக்கிய நாடுகளின் சமாதானப் படையின் அங்கீகாரத்தை வலியுறுத்தியிருந்தார்.

அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கும் போது, சர்வதேச சமூகம் பயிற்றப் பட்ட இராணுவம் மற்றும் பொலிஸ் ஆகிய படையினரை வழங்கி தேர்தல் சிறந்த முறை யில் நடைபெறுவதற்கு உதவவேண்டுமெனக் கேட்டுக்கொண்டார். ஐவரிக்கோஷ்ரின் போராளிகள் முன்னர் தெரிவித்ததுபோன்று, ஆயுதங்களைக் களைவதற்கு முன்வரப்போவதில்லை எனத் தெரிவித்தார்.

ஆயுதங்களைத் திரும்பவும் ஒப்படைப்பதை தேர்தலின்பின்பே செயற்படுத்துவதற்குத் திட்டமிட்டுள்ளதாக போராளிக்குழுவின் தலைவரான குல்லோமி சொரோ தெரிவித்தார்.



போராளிக்குழுவின் முன்னாள் தலைவரான குல்லோமி சொரோ தொடர்பாடல் அமைச்சராகக் கடமையாற்றி வருகின்றார்.

ஆனால் ஆயுதக் களைவை மார்ச் மாதம் 8 ஆம் திகதி தொடக்கம் ஆரம்பிக்கப்போவதாக, அதிகாரப்பகிர்வினை கொண்ட அரசின் பிரதமர் 'டியாரா' தெரிவித்துள்ளார்.

பிரான்ஸை நடுவராகக் கொண்டு நடத்தப்பட்ட பேச்சுவார்த்தையின் மூலம், ஐவரிக்கோஸ்ரில் போர் ஓரளவுக்கு நிறுத்தப்பட்டுள்ளதனால். அடுத்த ஆண்டில் அங்கு தேர்தல் நடத்துவதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

### பிரேஸில் மிருகக்காட்சிச் சாலையில்

## உடலுறுப்பு செயலிழந்த நிலையில் திடீரென மிருகங்கள் உயிரிழப்பு!

பிரேஸிலில் அமைந்துள்ள 'சயோ பேஸீலா' மிருகக் காட்சிச் சாலையில் இதுவரை 50க்கும் மேற்பட்ட மிருகங்கள் திடீரென இறந்துள்ளன. நஞ்சூட்டலே இந்த இறப்புக் காரணம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உடலுறுப்புக்கள் திடீரென செயலிழந்த நிலையில் மிருகங்கள் இறப்பதனால் இறப்பிற்கான காரணத்தை ஆராயும் நோக்குடன் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனை ஆய்வுகளின்படி எலிகளைக் கொல்வதற்கு உபயோகிக்கும் நஞ்சினால் மிருகங்கள் இறந்துள்ளமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

நஞ்சுச் செறிவு இறந்த மிருகங்களின் உடலில் அதிகரித்துக் காணப்பட்டுள்ளதால் தற்காலிகமாக ஏற்பட்ட மரணம் என்பதை ஆய்வுகளை மேற்கொண்ட அதிகாரி மறுத்துள்ளார்.

இதுவரை சிம்பன்சீ எனப்படும் 3 மனிதக் குரங்குகள் மற்றும் 30 ற்கும் மேற்பட்ட முள்ளுப் பன்றிகள் மரணமடைந்துள்ளன.

சென்ற மாதம் யானைகள், ஒட்டகங்கள், எருதுகள் ஆகியனவும் மரணமடைந்திருந்தன.

இந்த மிருகங்களின் மரணத்துக்கு காரணமாக உள்ளவர்களை தேடும் பணியில் பொலிஸார் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர்.



மேலும், மிருகக் காட்சிச்சாலையில் உள்ள மிருகங்களின் மரணத்துக்கு காரணமானவர் இந்த மிருகக் காட்சிச்சாலையுடன் தொடர்புடையவர் எனவும், நஞ்சுப் பொருட்கள் தொடர்பாக புலமைமிக்கவர் எனவும் பிரேஸிலின பொலிஸ் அதிகாரியான 'குலோவிஷ் பெரிரா' தெரிவித்தார்.

மிருகக் காட்சிச்சாலையின் சிப்பந்திகள் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளதுடன் இருவரை ஒன்றிணைந்து பணியாற்றுமாறும் கேட்கப்பட்டுள்ளனர்.

மிருகக் காட்சிச்சாலையின் மிருகங்கள் நஞ்சூட்டிக் கொல்லப்பட்டமை சர்வதேச கவனத்தை ஈர்த்துள்ளது.

## வன்முறை மற்றும் நகர்வை நிறுத்துக கெயிட்டிக்கு அமெரிக்கா எச்சரிக்கை

கெயிட்டியின் ஜனாதிபதி ஜீன் பேட்ரான்ட் அரிஸ்டைட் அரசிற்கு சார்பான கும்பல்களைத் தூண்டி வன்முறைச் சம்பவங்களை நிகழ்த்தி வருவதாக அமெரிக்கா எச்சரித்துள்ளது. அத்துடன் போராளிக்குழுக்களை தலைநகர் போட் - ஓ - பிரின்சை நோக்கி நகர்வதை நிறுத்துமாறு கேட்டுள்ளது.

போராளிக்குழுவினர் தலைநகருக்கு 60 கிலோ மீற்றரில் அமைந்துள்ள 'மிரேபலேஷ்' நகரைக்கைப்பற்றியுள்ளனர்.

தலைநகர் போட் ஓ பிரின்சின் சட்ட ஒழுங்குகள் தற்போது நிலைகுலைந்துள்ளதால் ஜனாதிபதிக்கு ஆதரவானவர்கள் வீதித்தடைகளை ஏற்படுத்தி கொள்ளைகளிலும், கொலைகளிலும் ஈடுபட்டு வருவதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

ஜனாதிபதி அரிஸ்டைட் தனது ஆதரவாளர்களுக்கு வன்முறைகளை நிறுத்துமாறு கட்டளையிடவேண்டும் என இது அமெரிக்கா கருத்துத் தெரிவித்துள்ளது. இத னிடையே ஜனாதிபதி அரிஸ்டைட் மக்களை காப்பாற்றுவதற்காக பதவியில் தொடர்ந்தும் இருக்கப் போவதாகத் தெரிவித்துள்ளார். மேலும் போராளிக்குழுத் தலைவரான 'கைப்பி லிப்ஸ்' தலைநகரிலிருந்து 60 மைல்களுக்கு வெளியே அமைந்துள்ள 'செயின் - மார்க்கை' கைப்பற்றவுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

இதனிடையே ஐக்கிய நாடுகளின் அகதிகளுக்கான அமைப்பு கெயிட்டியின் எல்லை நாடுகள் தஞ்சம் கோரும் கெயிட்டி அகதிகளை ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டுகோள் விடுத்துள்ளது.

## காஷ்மீர் முதலமைச்சர் பங்கேற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் குண்டுவீச்சு ஒருவர் பலி; நான்கு பேர் படுகாயம்!

காஷ்மீர் முதல்வர் முப்தி முகமது சையதைக் கொல்ல முயற்சி நடந்தது. அவர் பேசிய கூட்டத்தில் வெடிகுண்டுகள் வீசப்பட்டன. இதில் அவர் காயமின்றி உயர் தப்பினார். ஒரு பெண் பலியானார். 4 பேர் படுகாயமடைந்தனர்.

காஷ்மீரின் முதல்வர் முப்தி முகமது தலைமையில் அவரது மக்கள் ஜனநாயகக் கட்சி மற்றும் காங்கிரஸ் கூட்டணி ஆட்சி நடக்கிறது.

நேற்றுமுன்தினம் மாலை பீர்வா என்ற இடத்தில் நடந்த தேர்தல் பிரசார பொதுக்கூட்டத்தில் முப்தி முகமது பேசிக்கொண்டிருந்தார். மேடையில் அவரது அமைச்சரவை சகாக்கள் சிலரும் அமர்ந்து இருந்தனர். பெரும் கூட்டம் திரண்டு இருந்தது.

அப்போது கூட்டம் நடந்த இடத்துக்கு 300 மீற்றர் தொலைவிலிருந்து துப்பாக்கியில் வைத்து 2 கையெறி குண்டுகளை கூட்டத்தை நோக்கித் தீவிரவாதிகள் சுட்டனர். அவை கூட்டத்தில் விழுந்து பலத்த சத்தத்துடன் வெடித்தன. இதில் ஒரு பெண், ஒரு பொலிஸ்காரர் உட்பட 5 பேர் படுகாயமடைந்தனர். இதைத் தொடர்ந்து கூட்டத்தினர் சிதறி ஓடினார்கள். பாதுகாப்பு அதிகாரிகள் மின்னல் வேகத்தில் மேடையிலிருந்த முதல்வர் முப்தி முகமதுவைக் கீழே இறக்கிப் பாதுகாப்பாக வெளியே கொண்டுசென்றனர்.

காயடைந்த 5 பேரும் மருத்துவமனைக்குக் கொண்டுசெல்லப்பட்டனர். அவர்களில் அந்தப் பெண் இறந்தார்.

சிறிது நேரம் கழித்து, முதல்வர் முப்தி முகமது மீண்டும் மேடைக்கு அழைத்துவரப்பட்டார்.

அப்போது அவர் பேசியதாவது -

மக்களின் எண்ணங்களுக்கு மதிப்பளிக்க வேண்டுமானால், அவர்களின் கருத்துக்களைத் தீவிரவாதிகள் கேட்கவேண்டும். ஆயுதங்களைக் கையில் எடுத்து இருப்பவர்கள் மக்கள் எதை விரும்புகிறார்கள் என்பதை அறிந்துகொள்ள வேண்டும்.

வன்முறைக்கும், ரத்தம் சிந்துவதற்கும் முடிவு கட்டவேண்டும் என்று மக்கள் விரும்புகிறார்கள். தீவிரவாதிகளின் செயலைக்கண்டு நான் பயந்துவிடமாட்டேன். அமைதியை நிலைநாட்டப் பாடுபடுவேன்.

நான் எனது வழியில் முயற்சிகளைத் தொடர்வேன். வன்முறைச் செயல்களால் என்னைத் திசைதிருப்பமுடியாது. இந்தப் பகுதியில் ஒரு கல்லூரி நிறுவப்படும் எனவும் அவர் உரையாற்றினார்.

முப்தி முகமது மீண்டும் பேசியபோது, அவரது பேச்சைக் கூட்டத்தினர் அமைதியாகக் கேட்டனர். ஆனாலும், இந்தச் சம்பவத்தால் அங்கு பதட்டமும், பீதியும் நிலவியது. இந்தத் தாக்குதலுக்கு எந்தத் தீவிரவாத இயக்கமும் இதுவரை பொறுப்பு ஏற்கவில்லை.

**உடன் தேவை**

**சுன்னாகத்தில் இயங்கும் போன் சொப் (Phone shop) நிலையத்தில் கடமையாற்றுவதற்கு விற்பனையாளரும், உதவி விற்பனையாளரும் (பெண்கள் மட்டும்) உடன் தேவை.**

**தொடர்புகளுக்கு:-**
**டயலொக் போன் சொப்**
*கே. கே. எஸ் வீதி,*
*சுன்னாகம்.*

(சி/2269)

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# இந்திய இறையாண்மை...

இலங்கைத் தீவில் இயங்கும் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம், இலங்கைத் தீவில் நடத்துகிற போராட்டத்தை இந்தியாவில் வாழும் தமிழர்களுக்காக இந்தியாவிலும் நடத்தாது. அது குறித்த அச்சம் தேவையற்றது.

ஈழத் தமிழர்கள், இந்தியாவை வலிமைமிக்க நட்பு நாடாகவே கருதுகின்றனர். அதனுடன் நல்லுறவையே மேற்கொள்ள விரும்புகின்றனர்.

ஈழத் தமிழர்கள், இந்திய அரசுக்குச் சொல்ல விழைவது இவைதான்-

தங்களது இழந்த அடையாளத்தை மீட்கவே ஈழத் தமிழர்கள் தாயக விடுதலைப் போராட்டத்தை நடத்தி வருகின்றனர்.

இலங்கைத் தீவில் சம உரிமையுடன் வாழ்வதற்காகவே நாங்கள் போராடுகிறோம்.

இலங்கைத் தீவின் வட - கிழக்கில் தனித்துவமான தேசத்தின் அடிப்படையிலேயே நாம் வாழ்கிறோம். எங்கள் மீதான எந்த மேலாதிக்கத்தையும் நாங்கள் விரும்பவில்லை. அதே நேரத்தில், தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இலங்கை நாடாளுமன்றத்திற்கு செல்வதன் மூலம் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கான மக்கள் ஆதரவை வெளிப்படுத்த முடியும்.

பிரிந்து சென்று தனியரசு அமைப்பதற்கு இணையான மாற்றான யோசனை ஒன்று முன் வைக்கப்படுமானால் அதை நாம் பரிசீலிக்கத் தயார்.

ராஜீவ் மரணத்தைப் பொறுத்தவரையில் தேசியத் தலைவர் அவர்கள் தெரிவித்தபடியேயான, துன்பியல் நிகழ்வு என்பதில் எமது இயக்கத்துக்கு எவ்வித மாற்றான நிலைப்பாடும் இல்லை. ஆயிரக்கணக்கான அப்பாவி ஈழத் தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டது, பாலியல் வல்லுறவுக்குள்ளாக்கப்பட்டது உள்ளிட்டவற்றை எம்மக்கள் மறந்துவிட இயலாது என்பதையும் எமது இயக்கம் எண்ணிப்பார்க்கும்.

- இந்தியா இப்போதும் எப்போதும் எங்களுக்கு அருகாமையில் உள்ள பெரிய அண்ணன் தேசம். அதற்கென தார்மீக பொறுப்புகள் உண்டு. இரு தேசங்களுக்கும் இடையே இழந்துபோன உறவை புதுப்பிக்க தமிழீழ மறுசீரமைப்பில் இந்தியா பங்கேற்க வேண்டும். அதே நேரத்தில் மீளவும் இலங்கைத் தீவில் இந்தியாவின் இராணுவத் தலையீட்டை உருவாக்கி ஈழத் தமிழர்களை அழிக்க சிங்கள அரசியல்வாதிகள் மேற்கொண்டு வரும் நடவடிக்கையையும் நாம் இந்திய அரசுக்கு சுட்டிக்காட்டுகிறோம்.

கடந்துபோன நிகழ்வுகளையெல்லாம் நாம் கீறிப்பார்க்க விரும்பவில்லை. அவற்றை கீறிப் பார்த்துக் கொண்டிருந்தால் புதியதான உறவுகள் தடைப்பட்டு கொண்டேயிருக்கும்.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்துடனும், அதன் தலைமையுடனும் எமது மக்கள் இணைந்து நிற்கின்றனர். அதனை சர்வதேச சமூகம் நன்குணர்ந்து எம்முடன் பேச்சுகளை நடத்துகிறது. இந்த உண்மையை இந்தியா உணர்ந்து கொள்ள வேண்டும். தலைவர் பிரபாகரனுக்கு எதிரான பிடியாணை தொடர்பானவை என்பன போன்ற எந்த கொள்கையையும் நடைமுறை சாத்தியத்துடன் ஆராயப்படவேண்டும்.

இந்தியாவில் உள்ள தமிழ்நாட்டு மீனவர்களுக்கும், தமிழீழ மீனவர்களுக்கும் இடையே இருந்த நல்லுறவை அழித்துவிட்டு தற்போது மோதலை அதிகரிப்பதில் இலங்கைக் கடற்படை தீவிரம் காட்டிவருகிறது. தமிழீழ விடுதலைப் புலிகள், இந்திய அரசுடன் கடல் வளங்களைப் பகிர்ந்து கொள்வதில் தயாராக இருக்கிறது.

தமிழீழத்தில் இடைக்கால அரசு உருவாகும் நிலையில் தமிழ்நாட்டு மீனவர்களுடன் எமது அரசு இது தொடர்பான பேச்சுகளை நடத்தும்.

இடைக்கால நிர்வாகம் அமைத்த பிறகு ஐந்து ஆண்டுகள் கழித்து தேர்தல் நடத்தப்படும். ஏனெனில், கடந்த இரு தசாப்தங்களாக சிதைந்து போயுள்ள மக்களின் அடிப்படை வாழ்க்கையை மீள சீரமைப்பதற்கான காலம் அது. அந்த சிக்கல்கள் தீர்க்கப்படுமானால் ஜனநாயக மற்றும் தனிநபர் உரிமைகளை சர்வதேச சமூக வரையறையின் கீழ் சந்திக்கத் தயாராக இருக்கிறோம்.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம்,இலங்கையின் அரசியல் சாசனத்தை ஏற்கவில்லை. அது ஒற்றைத் தேசத்தை வலியுறுத்துகிற சாசனம். கூட்டரசை ஏற்காத அரசியல் சாசனம். அதனால்தான் எதிர் வரும் தேர்தலில் எமது இயக்கம் பங்கேற்கவில்லை. அத்துடன் இலங்கை நாடாளுமன்றமானது எமது தமிழ் மக்கள் இழந்த உரிமைகளை மீட்டுத் தரும் என்று நாம் எண்ணவில்லை.

## இலங்கையில்

# சிறந்த எதிர்காலத்துக்கு சமாதானம் அவசியமாகும்

## நோர்வே தூதுவர் தெரிவிக்கிறார்

(கொழும்பு)

இலங்கையின் தற்போதைய இளைய தலைமுறையின் எதிர்காலம் சிறந்ததாக அமையவேண்டுமானால், சமாதானம் நிலவவேண்டியது அத்தியாவசியமானது என்று இலங்கைக்கான நோர்வேத் தூதுவர் ஹான்ஸ் பிரட்ஸ்கர் தெரிவித்தார்.

அம்பாந்தோட்டையில் சமூக சேவை மத்திய நிலையம் ஒன்று நோர்வே அரசாங்கத்தின் நிதியுதவியுடன் நேற்றுமுன்தினம் திறந்து வைக்கப்பட்டது. இந்த வைபவத்தில் கலந்துகொண்டு பேசியபோதே நோர்வேத் தூதுவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்- நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்கு மட்டுமல்ல, சமாதானத்திற்காகவும் பங்களிக்க எமக்குச் சந்தர்ப்பம் கிடைத்துள்ளது. சமாதானம் காலத்தின் பிரதான தேவையாகவுள்ளது. இலங்கையில் சமாதானம் நிலை நாட்டப்பட்டால் அதன் பலாபல[ன்]களை பின்தங்கிய மாவட்டங்கள[ில்] வாழும் மக்களும் அனுபவிப்பர் [என] அவர் சுட்டிக்காட்டினார்.

### பூந்தோட்டம்...

இதன்போது, டயந்தன் (வயது 06) என்ற சிறுவன் கடும் தீக்காயத்துடன் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். மேலும் ஏழு பேர் சிறு தீக்காயங்களுக்கு உள்ளாகினர். இந்தத் தீ அனர்த்த சம்பவத்தில் 10 கொட்டகைகளில் இருந்த இடம் பெயர்ந்த மக்களின் அனைத்து உடைமைகளும் எரிந்து சாம்பராகின.

இந்தத் தீ வேறு இடத்திற்கும் பரவாமல் தடுக்க வவுனியாவிலுள்ள தீயணைப்புப் படையினர் முயற்சிகளை மேற்கொண்டனர்.

தீச்சம்பவத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு யு.என்.எச்.சி.ஆர் மற்றும் சீட் ஆகிய அரசசார்பற்ற நிறுவனங்கள் நிவாரண உதவிகளை வழங்கின.

(03)

### எப்போது...

மேற்கண்டவாறு தெரிவித்திருந்தார்.

பத்திரிகையாளருக்கான இந்தக் கூட்டத்தில் விமல் வீரவன்ச மேலும் தெரிவித்ததாவது -

புதிய அரசாங்கம் ஆட்சிக்கு வந்து விடுதலைப் புலிகளின் திட்ட வரைபை நிராகரித்தால், அவர்கள் யுத்தத்தை ஆரம்பிப்பார்கள் என்பது பிரதமர் ரணிலுக்கு எவ்வாறு தெரியும். பிரதமர் ரணில் - எப்போது விடுதலைப் புலிகளின் ஊடகப் பேச்சாளரானார் என்பது எனக்குத் தெரியவில்லை.

ஐக்கிய தேசியக் கட்சி தேர்தலில் தோல்வியடைந்தால் விடுதலைப் புலிகள் யுத்தத்தை ஆரம்பிக்க வேண்டுமென புலிகளும் ஐக்கிய தேசியக் கட்சியும் ஒரு இரகசிய உடன்பாட்டைச் செய்துள்ளனர் என சந்தேகத்தை ஏற்படுத்துவதாக உள்ளதென விமல் வீரவன்ச மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, ஐக்கியதேசியக் கட்சி ஊடகங்களின் மூலம் தவறான தகவல்களை மக்களுக்குப் பரப்பிவருவதாக ஊடகத்துறை அமைச்சரான லக்ஷ்மன் கதிர்காமர் குற்றஞ்சாட்டியுள்ளார்.

### உழவு...

வீதியைக்கடக்க முற்பட்ட போது எதிரே வந்த உழவு இயந்திரம் மோதியதில் படுகாயமடைந்து வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்படும் வழியில் பரிதாபகரமாக உயிரிழந்தார்.

மரணமடைந்த பெண்ணின் சடலம் தற்போது வைத்திய பரிசோதனைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. இந்த விபத்துத் தொடர்பாக சுன்னாகம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (தீ,121)

### சொத்து...

செய்யப்பட்ட தினத்தில் இ[...] மூன்று மாத காலத்துக்குள் [...] சொத்துக்கள், பொறுப்புக்கள் [...]றிய விபரங்களை வெளிப்[படுத்த] வேண்டும்.

அதேவேளை, வெற்றி[...] நாடாளுமன்ற உறுப்பின[...] தெரிவு செய்யப்படும் வேட்பாள[...] தமது பதவியை பொறுப்பேற்ப[...] முன்னர் அல்லது நாடாளுமன்[றத்]தில் அமர்ந்து வாக்களிப்பத[ற்கு] முன்னர் சொத்துக்கள், பொறுப்[புக்]கள் பற்றிய விபரங்களை வெளி[ப்]படுத்த வேண்டுமெனவும் தேர்[தல்] ஆணையாளர் மேலும் கேட்டுள்ள[ார்].

# தேர்தல் நடைமுறை...

நாம் கொடுத்துள்ளோம். இதனடிப்படையில் மக்களுக்கு சரியான முறையில் வாய்ப்புக்களை செய்து கொடுக்க வேண்டும். ஏனெனில், இது யுத்தநிறுத்த உடன்பாட்டுடன் சம்பந்தப்பட்ட விடயமாகும்.

படைத்தரப்புடனும், எமது தரப்புடனும் சம்பந்தப்பட்ட விடயம் என்பதால் கண்காணிப்புக்குழுவும் சில நடைமுறைகளை ஒழுங்குபடுத்த வேண்டும் என்பதனை அவர்களுக்கு விளக்கியுள்ளோம்.

எமது கோரிக்கைகள், நிலைப்பாடுகளை கண்காணிப்புக்குழுத் தலைவர் கவனத்தில் எடுத்துள்ளார். இது தொடர்பாக சம்பந்தப்பட்ட தரப்பினருடன் பேசி முடிவுகளை விரைவாக அறிவிப்பதாகவும் உறுதியளித்திருக்கின்றார் எனத் தெரிவித்தார்.

இதேவேளை, கண்காணிப்புக் குழுத் தலைவர் செய்தியாளர்களிடம் தெரிவிக்கையில் -

யுத்த நிறுத்த கண்காணிப்புத் தொடர்பானதாகவே எமது பேச்சு அமைந்தது. அரசியல் விவகாரம் தொடர்பாக எதுவும் பேசவில்லை.

நடைமுறையில் உள்ள போர் நிறுத்தத்தை புலிகள் கடைப்பிடிப்பார்கள் என்ற உறுதிமொழியை அவர்கள் மீண்டும் தெரிவித்தனர். அத்துடன் கண்காணிப்புக்குழு[...] பூரணமான ஒத்துழைப்பை [...] கொள்வதாகவும் உறுதியளி[...] என புருவ் ஹொவ்டே தெரி[வித்தார்].

இதேவேளை, அண்[மையில்] கிழக்கு மாகாணத்திற்குச் [சென்ற] ஹொவ்டே அங்கு புலிகளின் [...]திய தளபதிகள், அரசியற்து[றை] பொறுப்பாளர்களையும் சந்தி[த்தார்]. அந்த சந்திப்புக்கள் தொடர்[பான] விடயங்களும் நேற்றைய தமி[ழ்] செல்வனுடனான சந்திப்பில் கல[ந்து]ரையாடப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

### காணாமற்...

இந்திய மீனவர்களால் கடல[ில்] வீசப்பட்ட சிவாணந்தன் கடந்த [...] தினங்களாக காணாமற்போயிரு[ந்]தார்.இதுதொடர்பாக போர்நிறுத்[த] கண்காணிப்புக்குழு மனித உரிமை[...]கள் ஆணைக்குழுவிற்கும் அறிவிக்கப்பட்டிருந்தது.

கடந்த வியாழக்கிழமை காணா[மற்]போன இந்த மீனவரை கண்டு பிடிக்க இலங்கைக் கடற்படை[...]யினரும் கண்காணிப்புக்குழுவினரு[ம்] மேற்கொண்ட முயற்சிகள் தோல்வி[யி]ல் முடிவடைந்திருந்தன.

இந்தநிலையில் நேற்றுக் கால[ை] வல்வெட்டித்துறை கடற்கரை[...] கரையொதுங்கிய நிலையில் கா[ணா]மற்போனவர் சடலமாக மீட்க[ப்பட்]டார்.




Spoken Englis[h]
WITH
GRAMMAR
Lectures By: Mr. M.A.HA[...]
புதிய பிரிவுகள் ஆரம்ப[ம்]
02.03.2004 செவ்வாய்
மாலை 3.00 மணி
Tuesday / Thursday } 3.00 P.M. - 4.00 P.[M.]
HARY'S INSTITUT[E]
இல. 564, கஸ்தூரியார் வீதி
(யாழ். இந்து ஆரம்ப பாடசாலைக்கு அருகில்)
யாழ்ப்பாணம் (சி-2260)




இப்பத்திரிகை இல. 267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 29.02.2004 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.